Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு
EELA NADU

போன். 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 13 ஆம் நாள் ஜ. ஆகிர் 19 (28-11-61) செவ்வாய்கிழமை இதழ் 245

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம்தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# அதிபர் நாஸரை கொலை செய்ய முயற்சி

## 4 பிரஞ்சுக்காரர் உட்பட 9 பேர் கைது

### பாரிஸில் திட்டம் தீட்டப்பட்டதாம்!

கொய்ரே, நவ. 27

உளவுவேலை செய்ததாகவும், ஜனாதிபதி நாஸரைக் கொலைசெய்யச் சதி செய்ததாகவும் 4 பிரெஞ்சுக்காரர்கள் உட்பட 9 பேர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாய் மத்திய கிழக்கு செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

வெள்ளிக்கிழமை அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பிரெஞ்சு வழக்கறிஞர் ஒருவரும், இத்தாலிய பத்திரிகையாளர் ஒருவரும், கிரேக்க பத்திரிகையாளர் ஒருவரும், இரண்டு பெண்களும் இருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட பிரெஞ்சுக்காரர் ஒருவர் தாம் ஜனாதிபதி நாஸரைக் கொலைசெய்யத் திட்டமிட்டதாயும், ஜனாதிபதி நாஸரைக் கொலைசெய்ய பிரெஞ்சு அரசாங்கமே ஒரு திட்டம் வகுத்திருப்பதாயும் கூறினர். ஐக்கிய அராபியக் குடியரசில் ராணுவ, இதர இரகசியத் தகவல்களைச் சேகரிக்குமாறு தம்மை பிரெஞ்சு அரசாங்கம் அனுப்பியதாயும் அவர் கூறினராம்.

## இந்தியர் பிரச்சினை தீர பிக்கு கூறும் வழி

### தோட்டப்பகுதி இளைஞருக்கு பிக்குவாகப் பயிற்சி

இரத்தினபுரி, ஞாயிறு

இந்தியாவிலிருந்து பத்து ஹரிஜன இளைஞர்களை இங்கு கொண்டுவந்து வெள்ளவத்தையிலுள்ள பௌத்த கழகத்தில் பௌத்த பிக்குகளாகப் பயிற்சியளிக்கப்போவதாகவும் இதற்காக விரைவில் இந்தியாவுக்குச் செல்லவிருப்பதாகவும் ஸ்ரீசுமண பிரிவின அதிபர் ஹென்பிட்டி கெதர ஞானசிக தேரோ, பௌத்தர்களின் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

பிக்குகளாகப் பயிற்சியளிக்கப்படும் பத்துபேரும் பின்னர் இந்தியாவுக்குச் சென்று அவர்களுடைய உற்றார் உறவினர் மத்தியில் பௌத்த தர்மம் பற்றி உபதேசம் செய்வரென்று தேரோ கூறினர்.

பெல்மதுலையிலுள்ள பௌத்த நிலையத்தில் இந்தியத் தமிழர்கள் சிலருக்கு பிக்குகளாகப் பயிற்சியளிக்கப்படுமென்றும் பின்னர் இவர்கள் தமிழர்களுக்கு பௌத்தம் பற்றி உபதேசம் செய்வதற்காக மலைநாட்டிலுள்ள தோட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்களென்றும் ஞானசிகதேரோ தெரிவித்தார்.

பிக்குகளாகப் பயிற்சி பெற விருப்பம் தெரிவித்து தோட்டப் பகுதிகளிலுள்ள படித்த வாலிபர்களிடமிருந்து தமக்கு பெருமளவில் விண்ணப்பங்கள் வந்திருப்பதாக தேரோ கூறினர்.

பிக்குகளாகப் பயிற்சி பெறுபவர்கள் தோட்டங்களில் ஆலயங்கள் அமைப்பதற்கு சகல உதவியும் அளிக்கப்படுமென்றும் அவர்களுக்கு உணவும் வழங்கப்படுமென்றும் அவர் கூறினர்.

"பயிற்சியளிக்கப்பட்ட பிக்குகள் தோட்டப் பகுதிகளில் தமிழர்களுக்கு பௌத்த உபதேசம் செய்வர். இது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே நெருங்கிய நல்லெண்ணத்தை ஏற்படுத்த உதவி புரியும். தோட்டப் பகுதியிலுள்ள தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் உள்ள வேறுபாட்டை நீக்குவதற்கு சிறிதளவு சிங்கள அறிவும் பௌத்த ஞானமும் இருந்தால் போதும். இன்னும் சில வருடங்களுக்குள் கலப்பு மணங்களும் நிகழும். இதுதான் இந்திய தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரே வழி. இதற்கு அரசாங்கம் உதவிபுரியுமென்பதில் சந்தேகமில்லை" என்று ஞானசிகதேரோ கூறினர்.

## கிவு ஐ. நா. வசம் வந்தது

எலிஸபெத்வில்லி, நவ. 27

கடாங்காவில் கிவுமாகாணத்திலுள்ள கிண்டு நகரை ஐ. நா. துருப்புக்கள் வசப்படுத்திக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

## இன்று க்ஷயரோக தினம்

கொழும்பு, செவ்வாய்

இன்று க்ஷயரோக தினம். இத்தினம் சம்பந்தமாக உள்நாட்டு மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா விடுத்துள்ள ஒரு செய்தியில் க்ஷயரோகத்தைக் கட்டுப்படுத்த ஆண்டுதோறும் அரசாங்கம் 180 லட்சம் ரூபாய் செலவு செய்து வருவதாய்க் கூறினர்.

## சுதந்திரா கட்சி 700 ஸ்தானங்களுக்கு போட்டியிடும்

சென்னை, நவ. 27

வருகிற பொதுத் தேர்தலில் சுதந்திரா கட்சி ராஜ்யங்களில் 600 ஸ்தானங்களுக்கும், லோக சபையில் 100 ஸ்தானங்களுக்கும் போட்டியிடும் என ராஜாஜி அறிவித்தார்.

## செட்டிகுளம் கி. ச. தலைவர் மரணம்

### துப்பாக்கிக்காயங்களுடன் இறந்து கிடந்தார்

வவனியா, திங்கள்

செட்டிகுளம் கிராம சபைத் தலைவர் திரு. கோ. சிவசிதம்பரம் சனிக்கிழமை காலை தமது வீட்டில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

காலை உணவை முடித்துக் கொண்டு தமது அறைக்குள் சென்ற அவர் தமது துப்பாக்கியால் தமமைத்தாமே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகக்கூறப்படுகிறது.

## கப்பல், விமான மூலம் வெளிநாடு செல்பவர்கள்

### ரூ. 7-50 வரி செலுத்த வேண்டியிருக்கும்

கொழும்பு, திங்கள்

கப்பல் அல்லது விமான மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு விதிக்கப்படவிருக்கும் ரூ. 2-50 வரி, ஐந்து ரூபாயாக உயர்த்தப் படவிருக்கிறது. ஏனெனில் கொழும்பு பிரயாணிகள் துறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றின் பராமரிப்புக்கான செலவில் ஒரு சிறு பகுதியைக் கூட ரூ. 2-50 வரி ஈடுசெய்யவில்லை எனக் கூறப்படுகிறது. இந்தவரி இறுதியில் ரூ. 7-50 வரை உயர்த்தப்படவிருக்கிறது எனவும் திறைச்சேரி அதிகாரிகள் அறிவித்தனர்.

## டிசம்பர் 11-ல் ஈச்மன் தீர்ப்பு

டெல்அவிவ், நவ. 27

60 லட்சம் யூதர்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அடால்ப் ஈச்மன் வழக்கில் வருகிற டிசம்பர் மாதம் 11-ம் திகதி தீர்ப்பளிக்கப்படும். அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செலாவணி பர்மிட்டில் கடும்நடவடிக்கை

### இறக்குமதியாளருக்கு எச்சரிக்கை

கொழும்பு, திங்கள்

வர்த்தகர்களுக்கு வெளிநாட்டு செலாவணிப் 'பர்மிட்' வழங்குவதில் கடுமையான கட்டுப்பாடும் கண்காணிப்பும் விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இறக்குமதி ஸ்தாபனம் ஒவ்வொன்றுக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகா பிரதிநிதியொருவர் நேரில் சென்று விசாரித்து அந்த ஸ்தாபனத்தின் வர்த்தகத் தொடர்புகளில் திருப்தி அடைந்த பின்னரே இறக்குமதியாளர்களுக்கு வெளிநாட்டுக்குப் பணம் அனுப்புவதற்குரிய அனுமதி வழங்கப்படும்.

இப் புதிய திட்டத்துக்கிணங்க இறக்குமதியாளர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றும் குறிக்கப்பட்ட தினத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகா பிரதிநிதியைச் சந்தித்து 1957-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் 1961-ம் வருடம் ஜூன் மாதம்வரையுள்ள தங்களுடைய வர்த்தக விபரங்களையும் இறக்குமதி விபரங்களையும் இறக்குமதியாளர் கொடுக்கத் தவறினல் அந்நிய செலாவணிப் பர்மிட்டுக்கு அனுமதி வழங்கப் படமாட்டாவென எச்சரிக்கப் பட்டுள்ளது.

## ரஷ்ய வானவெளி வீரர் வருகிறர்

### யாழ்ப்பாணத்தில் மகத்தான வரவேற்பு

### மாணவர் கேள்விக்கு ககாரின் பதில் அளிப்பார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ரஷ்ய வானவெளி வீரர் ககாரின் அடுத்த மாதம் 10-ம் திகதி திருமதி ககாரினுடனும் அவரது கோஷ்டியாருடனும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறர்.

ககாரினுக்கும் அவரது கோஷ்டியினருக்கும் மகத்தான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகளைக்கவனிப்பதற்கு ஒரு விசேஷ வரவேற்புக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணப் பாடசாலை அதிபர்கள் மகாநாட்டில் இந்த வரவேற்புச் சபை தெரிவுசெய்யப் பட்டது.

டிசம்பர் மாதம் 10-ம் திகதி காலை 11-15 க்கு ககாரின் தமது கோஷ்டியினருடன் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவார். பலாலியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட திறந்த மோட்டார் வாகனத்தில் ககாரின் காங்கேசன் துறை வீதிவழியாக யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்துக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்.

அன்று பகல் 11-45 தொடக்கம் 12-15 வரை முற்றவெளி மைதானத்தில் அவர்களுக்கு பகிரங்க வரவேற்பு ஒன்று அளிக்கப்படும்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் 6 மாணவர்கள் அவரது வானவெளிப்பிரயாண அனுபவங்கள் சம்பந்தமான கேள்விகளை கேட்பதற்கும், திரு. ககாரின் பதிலளிக்கவும் ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிகிறது.

ககாரினும் அவரது கோஷ்டியினரும் மத்தியான உணவின் பின் பலாலி வீதிவழியாக மாலை 2-30 க்கு விமானநிலையத்துக்குச் செல்வார்கள்.

## ஏற்றுமதி வருமானம் குறைவு

கொழும்பு, திங்கள்

சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டு முதல் 9 மாதங்களில் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் மூலம் கிடைத்த வருமானத்தில் ரூ. 6 கோடி குறைந்துள்ளது என அறிவிக்கப்படுகிறது.

## க்ஷயரோகிகளுக்கு புனர்வாழ்வு திட்டம்

கொழும்பு, திங்கள்

க்ஷயரோகிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டமொன்று அடுத்த மாதம் முதல் வாரம் சமூக சேவை டைரக்டர்களால் நிர்வாக, சேமநல, சமூக சேவை அதிகாரிகளுடன் விவாதிக்கப்படும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## புற்று நோய்

புற்று நோய்க்கு கைகண்ட அவுடதமாக விளங்குவது
**'யோகீஸ்வர ரசம்'**

இதனை உபயோகித்து குணமடைந்தோர் வெகு பலர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கைகண்ட அனுபவ சாதனை மூலம் இதன் மகிமை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு முறை எம்மிடம் மருந்து உண்டவர்களுக்கு திரும்பவும் இந்நோய் வரவில்லை என்பதற்கு நற்சாட்சிகள் தக்க கனவான்களிடமிருந்து எமக்குக் கிடைத்துள்ளன.

இந்நோயால் பீடிக்கப்பட்டு வருந்துவோர் ஒருமுறை எம்முடன் கலந்தாலோசிக்கவும்.
**பொ. செல்லையா** ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


# இந்திய படகுமீது 2-ம் தாக்குதல்
## போர்த்துக்கல் செய்கை பற்றி டில்லி கவலை

பம்பாய், நவ. 26

இந்திய மீன் பிடிக்கும் படகு ஒன்று அஞ்சதேவ் என்ற போர்சுக்கீஸியத் தீவிலிருந்து சுடப்பட்டது. இதன் விளைவாக 3 படகோட்டிகளில் ஒருவரான ராஜாராம் ஆத்மாராம் கோச்ரேகர் கொல்லப்பட்டார். அதிகார வட்டாரங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து இவ்விவரங்கள் தெரியவந்தன.

போர்ச்சுக்கீஸியத் தீவிலிருந்து இந்தியக் கப்பல்கள் சுடப்படுவது இது இரண்டாம் தடவையாகும். நவம்பர் 17-ந் தேதியன்று கடலோரப்போக்குவரத்துக் கப்பல் "சபர்மதி" சுடப்பட்டது.

வைத்திய சிகிச்சை கிடைப்பதற்குள், கோச்ரேகர் இறந்துவிட்டார். மீன் பிடிப் படகை நோக்கி மூன்று தோட்டாக்கள் சுடப்பட்டன. முதலாவது குண்டு படகின் தலைமீது விறிட்டுக் கொண்டு சென்றது. இரண்டாவது படகின் மேல்தளத்தின் முன்புறத்தைத் தாக்கியது.

மூன்ருவது கோச்ரேகரின் மீது நேராகப்பாய்ந்தது. அவரது இடதுகால் எலும்பை அடியோடு முறித்துவிட்டது. அவருடைய சகாக்கள் இருவரும் காயமடைந்தவருக்குத் தங்களாலியன்ற உதவிகளைத்தும் செய்தனர். விடியற்காலை 2 மணிக்கு கட்னிபாக் என்ற இடத்துக்கு படகு கொண்டு வரப்பட்டது. அரைமணிநேரத்திற்கெல்லாம் கோச்ரேகர் இறந்துவிட்டார்.

அஞ்சதேவ் தீவுக்கு 2 பர்லாங்கு தொலைவில், 'தோணி' வரும்போது போர்ச்சுக்கீஸியத் தீவிலிருந்து சுடப்பட்டது. இத்தீவு கார்வாரிலிருந்து இரண்டு மைல் தூரம்கூட இருக்காது. கோவாவின் தெற்கு எல்லையிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் இருக்கிறது. இரவு சுமார் 11 மணிக்கு இச்சிறு கப்பல் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

கோச்ரேகரின் தோணி மாலை 3 மணிக்கு மற்றும் 15 பிரயாணிகளுடன் மீன்பிடிக்கச் சென்றது. மீன் பிடித்துக் கொண்டு தோணி திரும்பும் போது, போர்ச்சுக்கீஸியத்தீவிலிருந்து சுடப்பட்டது.

போர்ச்சுக்கீஸியக் குண்டுக்குக் கோர்ச்ரேகர் இரையாகிவிட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போலக் கடலோரம் நெடுகவும், எல்லைப்புறப்பகுதிகளிலும் பரவியது.

தற்காப்பில்லாத சிறு மீன்பிடித்தோணி மீது, ஆத்திரமூட்டப்படாமலிருக்கும் போது சுட்டதைக் குறித்து போர்ச்சுக்கீஸியர் மீது பொது ஜன ஆத்திரமும் கண்டனமும் பரவியுள்ளது.

**டில்லி கவலை**

அஞ்சதேவ் தீவு அருகில் போர்ச்சுக்கீஸியர் மீனவர் படகு மீது சுட்டதை மிகவும் கடுமையான விவகாரம் என்று இங்குள்ள அதிகார வட்டாரங்கள் கருதுகின்றன.

கோவாவின் தெற்கு எல்லைக்கு 8 அல்லது 10 மைல் தூரத்தில் நடந்த இச்சம்பவத்தைக் குறித்து முழுத்தகவல்களும் அனுப்புமாறு மகாராஷ்டிர சர்க்காரிடம் இந்திய அரசாங்கம் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

திங்களன்று லோகசபையில் இப் பிரச்சினையை எழுப்ப எதிர்க்கட்சியினர் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளனர்.

---

## இன ஒற்றுமைக்கு பாடுபடுவேன்
### கலாச்சாரமந்திரி பேச்சு

"நான் பதவியிலிருக்கிற காலத்திலே இந்த நாட்டிலுள்ள இரு பெரிய இனங்களான சிங்கள - தமிழ் மக்களுக்கிடையே ஒற்றுமையும், நல்லெண்ணமும் நிலவச் செய்ய என்னால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்வேன்; சிங்கள - தமிழ்மக்களுக்கிடையிலே இன்று வேற்றுமைகள் இருப்பதற்குக் காரணம், அரசியல்வாதிகளாகிய நாங்கள் தான் என்று சமீபத்தில் கொழும்பிலே இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழுவால் நடத்தப்பட்ட நாடக விழாவை ஆரம்பித்து வைத்துத் தமிழில் பேசிய கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூறினர்.

---

## சாராயத் தவறணை கோரி மனுக்கள்

சாராயம் ஒருபோத்தல்விலை எட்டு ரூபாவாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தங்கள் பகுதிகளிலே சாராயத் தவறணைகளைக் கொண்டிருக்க அனுமதி வழங்குமாறு சுமார் 200 ஸ்தலஸ்தாபன சபைகளும் சங்கங்களும் உள்நாட்டு மந்திரி காரியாலத்துக்கு மனுப்பண்ணியிருக்கின்றன. அதனால் அவற்றின் மனுக்களுக்கு அனுமதியளிக்கும் விஷயமாய் உள்நாட்டு மந்திரி மதுபரிபாலன அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், மனுப்பண்ணியுள்ள பட்டினசபைகள், கிராமசபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டவிருக்கின்றார்.

---

## பிரிட்டிஷ் பிரதிநிதியின் உரை

லண்டன், நவ. 26

கடந்த அக்டோபர் 10-ந் திகதி பாரிஸில் நடைபெற்ற ஐரோப்பியப் பொதுச் சந்தை மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதிநிதி நிகழ்த்திய உரையின் பூரணவாசகம் சாம்ராஜ்ய நாடுகளின் அரசாங்கத்திற்கு வழங்கப்படவிருக்கிறது. சாம்ராஜ்ய நாடுகளில் ஏற்பட்டுள்ள தப்பபிப்பிராயங்களை முன்னிட்டே இவ்விதம் செய்யப்படவிருக்கிறதாம்.

---

## தென்னிந்திய மொழியை கற்கவேண்டும்

புதுடில்லி, நவ. 26

தென்னிந்திய மொழிகளில் ஒன்றை வட இந்திய மக்கள் கற்கவேண்டும் எனடாக்ர்டசம் பூர்ணனந்த் தெரிவித்தார்

# சம்பளக் கமிஷனின் சிபார்சு சில அமுலாக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

திரு. வில்மட் பெரேராவின் தலைமையிலான சம்பளக் கமிஷனின் சிபார்சுகளில் சிலவற்றை விரைவில் அமுல் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவற்றை அமுல்நடத்துவது சம்பந்தமான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு திறைசேரிக்கு அறிவிக்கப்பட்ளது.

காரியாலயத்திலிருந்து 30மைல்களுக்கு அப்பால் வாழும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு சீஸன் டிக்கட்டுகள் வழங்குவதற்கான ஒழுங்குகளை ஏற்கெனவே திறைசேரி செய்ய ஆரம்பித்துள்ளது.

அரைவாசிச் சம்பளத்துடன் 3 மாத கால லீவு வழங்குவது, சில உத்தியோகஸ்தர்களுக்கு உடை வழங்குவது ஆகிய சிலவும் அமுல்நடத்தப்பட இருக்கின்றன.

---

# பொதுத் தேர்தலில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி
## ராஜ்யங்களில் 900 ஸ்தானங்களுக்கு போட்டி

புதுடில்லி, நவ. 26

அடுத்த பொதுத் தேர்தலின் போது ராஜ்யங்களில் 900 ஸ்தானங்களுக்கும், லோகசபாவில் 120 ஸ்தானங்களுக்கும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி போட்டியிடும் என அதன் தலைவர் திரு. அசோக்மேத்தா கூறினர். வெற்றி நிச்சயம் எனக் கருதப்படும் தொகுதிகளிலேயே தமது கட்சி போட்டியிடுமென்றும், பெரும்பாலான தமது அபேட்சகர்கள் 30 அல்லது 35 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

---

# சீனுவின் புது ஆக்கிரமிப்பு: 28-ம் திகதி நேரு அறிக்கை

புதுடில்லி, நவ. 26

லடாக் பகுதியில் சீனுவின் புதிய ஆக்கிரமிப்பின் தன்மை, விஸ்தீரணம் பற்றி பிரதம மந்திரி நேரு செவ்வாய்க்கிழமையன்று லோகசபையில் ஒரு முக்கியமான அறிக்கை சமர்ப்பிப்பார்.

இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவுபற்றி கடைசியாக நடந்த கடிதப் போக்குவரத்துகள் அடங்கிய 60 பக்கங்கள் கொண்ட வெள்ளை அறிக்கையும் சமர்ப்பிக்கப்படும். சீன ஆக்கிரமிப்புபற்றி டிச. 4-ந் திகதி விவாதம் நடைபெறவிருக்கிறது. அதற்கு மெம்பர்கள் தயார் செய்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

சீனர் 1960-ல் வெளியிடப்பட்ட தேசப்படத்தின் அடிப்படையில் மூன்று அல்லது நான்கு இடங்களில் முன்னேறியிருக்கிருர்கள் என்பது நிச்சயம் என்றும், ஆனல் அவர்கள் அதிகப்படியாக வசப்படுத்திக் கொண்ட பிரதேசத்தின் விஸ்தீரணம் சில பத்திரிகைகளில் வெளியான அளவு இருக்காது என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

---

# காஷ்மீர் பிரச்சினை மீண்டும் ஐ. நா. போகும்
## பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் அறிவிப்பு

கராச்சி, நவ. 26

காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா. வுக்குக் கொண்டு போவதென பாகிஸ்தான் இறுதியில் முடிவு செய்துவிட்டது என்று பாக். ஜனாதிபதி அயூப்கான் குவெட்டாவில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

"இந்தியா எத்தகைய உடன்பாட்டுக்கும் வராததால் ஐ. நா.வுக்குப் போவதைத் தவிர வேறு மார்க்கமில்லாமல் போய்விட்டது" என்று அவர் சொன்னர்.

ஜம்மு, காஷ்மீர் பூராவுக்குமாகப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரே சர்க்கார் என்ற அந்தஸ்தில் தன்னை அங்கீகரிக்குமாறு "ஆஜாத் காஷ்மீர்" சர்க்கார் இன்னும் பாகிஸ்தானைக் கேட்கவில்லை என்று, அவர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னர்.

அவ்வாறு வேண்டுகோள் வரும்போது, அதைப் பரிசீலிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அங்கீகாரம் கோரும் பிரச்சினை நிபுணர்கள் பரிசீலனையிலிருப்பதாக பாக். ஆதிக்கத்திலுள்ள காஷ்மீர் பகுதி சர்க்காரின் பிரதிநிதி ஒருவர் சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

---

## காங்கோபற்றி ரொடீஷிய பிரதமர்

ஸாலிஸ்பரி, நவ. 26

காங்கோவில் ஐ. நா. சரியான பாகத்தைத் தாங்க வேண்டுமென ரொடீஷிய பிரதமர் சர். ராய் வெலன்ஸ்கி கூறினர். ஐ. நா. தன் நடவடிக்கை என்ன என்பதில் தயக்கம் காட்டுகிறது உணர்ச்சிவசப்பட்டு திடீரென ஐ. நா. அங்கு தீர்மானத்தை மேற்கொண்டால் அதனல் அபாயம் விளையும் என்றும் அவர் கூறினர்.

---

## டில்காவுக்கு 4 குட்டிகள்

மாஸ்கோ, நவ 26

சோவியத் வானவெளி நாயான டில்கா 4 குட்டிகளை ஈன்றிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

## டிகால் பாரிஸ் திரும்பினர்

பாரிஸ், நவ 26

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின் பிரெஞ்சு ஜனாதிபதி டிகால் இன்று பாரிஸ் திரும்பினர்.

---

## பணிசுக்கு அரை சதம் உயர்வு
### அளவு சிறுத்ததின் எதிரொலி!

மாவின் விலை ஏற்றப்பட்டதிலிருந்து பாடசாலை மாணவர்களின் மதியப் போசனத்துக்காகக் கொடுபட்டு வரும் பணிஸ்கள் அளவிலே சிறுத்துப் போய்விட்டதாகப் பாடசாலைகளின் அதிபர்களும், தலைமை ஆசிரியர்களும் கல்விப் பகுதிக்கு முறையீடு செய்து கொண்டதின் பேரிலே கல்வி மந்திரி பணிஸ்கள் வழங்குகின்ற போறணைகளின் சொந்தக்காரருக்குப் பணிஸ் ஒன்றுக்கு அவரச்சதம் கூட்டிக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிருர். இவ்விதம் அரைச்சத வீதம் கூட்டிக் கொடுப்பதாலே மேலதிகமாக 1,66,000 ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. இதுவரை கல்விப்பகுதி இரண்டு அவுன்ஸ் பணிஸ் ஒன்றுக்கு இரண்டரைச்சத வீதம் உதவிவந்தது. ஆகவே, இனிமேல் மூன்று சதம் உதவி வரும். மாவின் விலை சென்ற ஆவணி மாதம் இருத்தல் ஒன்றுக்கு ஐந்துசத வீதம் ஏற்றப்படலாயிற்று.


## கிறிஸ் மஸ் மலிவு விற்பனை
## ஆரம்பமாகும்
## நாளை எதிர்பாருங்கள்

# டயரும்ஸ்
மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# கிராம சேவகருக்கு பொலிஸ் அதிகாரம்

கொழும்பு, திங்கள்

பொலிசாருக்குரிய அதிகாரங்களுடன் கிராமசேவகர்களை நியமிப்பது பற்றி அரசாங்க அதிபர்களிடம் உள்நாட்டு கலாசார அமைச்சு அபிப்பிராயம் கேட்டிருந்தது.

இதுபற்றி அபிப்பிராயம் கூறிய அரசாங்க அதிபர்கள் நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கிடையில் இணைப்பு இல்லையென்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கிராமத் தலைமைக்காரர் பகுதிகளில் பலமைல் தூரத்துக்கு பொலிஸ்நிலையம் கிடையாதென்றும் இப்பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் முழுப்பொறுப்பும் கிராமத் தலைமைக்காரர் கையிலேயே யுள்ளதென்றும் சில அரசாங்க அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

சில பின்தங்கிய பகுதிகளில் கிராமத் தலைமைக்காரர்பொலிசாருடன் தொடர்பு கொள்வதற்கு நாட்கள் பலவாகின்றனவென்றும் அரசாங்க அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே குற்றங்களையும் ஊழல்களையும் தடுப்பதற்கு கிராம சேவகர்களுக்கு பொலிசாருக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டியது அவசியமென்று அரசாங்க அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

குற்றங்களைத் தடுப்பதற்காக கிராமசேவகர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் திட்டமொன்றை நீதி அமைச்சுடன் ஆலோசனை செய்து உள்நாட்டு அமைச்சு தயாரித்து வருகிறது.

## கேகாலையில் பெரியம்மை

கொழும்பு, திங்கள்

கேகாலைப் பகுதியில் புதிதாக பெரியம்மை நோய் பரவியிருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து சுகாதார இலாகாவின் தொற்றுநோய்த் தடுப்புப் பகுதியினர் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

## பஸ் விபத்து 20 பேர் காயம்

களுத்துறை, திங்கள்

இ. போ. ச. ஊழியர்களை ஏற்றிச் சென்ற யாத்திரீகர் பஸ் ஒன்று கொழும்பிலிருந்து கதிர்காமம் செல்லும் வழியில் கட்டுக்குருந்தையில் விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட இருபது பேர் காயமடைந்தனர்.

மரத்துடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்களில் 16 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றனர். மூவர் களுத்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஒருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.






## ஸ்தலஸ்தாபன அமைச்சின் புதிய திட்டம்

கொழும்பு, திங்கள்

வீட்டுப் பிரச்சினைகளையும் சேரிப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசாங்கம் செய்யும் முயற்சிகளை முறியடிக்க எத்தனிக்கும் சகல ஸ்தலஸ்தாபன சபைகளின் நிர்வாகத்தையும் எடுத்துக்கொள்வதற்கு ஸ்தலஸ்தாபன அமைச்சு உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் அரசியல் கொள்கைக்கு மாறான சில ஸ்தலஸ்தாபன சபைகள் வீட்டுப் பிரச்னை, சேரிப் பிரச்னை ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் செய்யும் முயற்சிகளை முறியடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்துவருவதாலேயே இவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதென்றும் ஸ்தலஸ்தாபன அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு பட்டினசபை

### 2ம் திகதி தேர்தல்

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவுப் பட்டினசபை தேர்தல், டிசம்பர் 2ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எல்லா வட்டாரங்களிலும் போட்டியிடப்படுகிறது. தற்போதைய தலைவர் திரு. சூ. மரியாம்பிள்ளை இம்முறை போட்டியிடவில்லை.

1ம் வட்டாரம்:- திரு வே. செல்வநாயகம் (சூரியன்), திரு சி. உ. தனபாலசிங்கம் (கை)

2ம் வட்டாரம்:- திரு. பி. மார்க்குப்பிள்ளை (கப்பல்) திரு அ. பிலிப்பையா (வீடு)

3ம் வட்டாரம்:- திரு அ. யேசுமார்க்கு (வீடு) திரு வெ. யோசேப் (சூரியன்) திரு அ. மேரி பிரான்சிஸ் (யானை)

4ம் வட்டாரம்.- திரு ஏ. மகந்தையா (துவிச்சக்கரம்) திரு வ. மயில்வாகனம் (யானை)

5ம் வட்டாரம்:- திரு சூ. வஸ்தியாம்பிள்ளை (சூரியன்) திரு க. நல்லதம்பி (நட்சத்திரம்);

## மேயர்கள் மகா நாடு

கொழும்பு, திங்கள்

நாட்டிலுள்ள சகல மேயர்களும் உதவி மேயர்களும் டிசம்பர் மாதம் 9ந் திகதி கூடி தங்கள் பகுதி நிர்வாகத்திலுள்ள சங்கடங்கள் பற்றி ஆலோசிப்பர். இந்த மகாநாட்டுக்கு மந்திரிகளோ மந்திரி காரியாலய அதிகாரிகளோ அழைக்கப்படவில்லை

## ஆர்ஜன்டினு அதிபர்

ரியோடிஜனிரோ, நவ, 27

ஆர்ஜன்டினு அதிபர் உலகச் சுற்றுப் பிரயாணத்துக்காக நேற்று புறப்பட்டார். இந்தியாவுக்கும் விஜயம் செய்யவிருக்கும் அவர் ஆர்ஜன்டினு பொருள்களுக்கு புதிய மார்க்கட்டுகள் கண்டுகொள்ள முயற்சி செய்வார்.

## ஊழியருக்கு 'மழைக் கோட்'

உடுப்பிட்டி, திங்கள்

கட்டைவேலிக் கிராமச்சபை வெளி வேலை செய்யும் தனது ஊழியருக்கு இலவசமாக 'மழைக் கோட்' வாங்கிக் கொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்துள்ளது.

## மணி வாக்கு

"சிக்கனமாயிருத்தல் வாழ் வாகிய போர்க்களத்தில் பாதி வெற்றி பெற்றது போலாம்."

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ13 உ (28-11 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## போர்த்துக்கீய அக்கிரமம்

இரு இந்தியக் கப்பல்கள் மீது போர்ச்சுகீயர் சுட்ட அக்கிரமம் காரணமாக கோவா விடுதலை நாள் விரைவில் நெருங்கிவிடுவதாக இருக்குமென்றே நம்புகின்ளேம்.

இம்மாதம் 17-ந் திகதி 'சபர்மதி' என்ற கடலோர பிரயாணக் கப்பல்மீது தங்கள் ஆதிக்கத்திலுள்ள அஞ்சத் தீவிலிருந்து போர்த்துக்கீயர் சுட்டிருக்கிருர்கள். கப்பலிலிருந்த ஓர் அதிகாரிக்கு சொற்ப காயம்பட்டது. அதை அடுத்து சென்ற 24-ந் திகதியன்று ஓர் இந்திய மீன்பிடித் தோணியின் மீதும் அதே தீவிலிருந்து சுட்டதின் பயனாக ஒருவர் மாண்டார். மற்றும் இருவருக்குக் காயம் பட்டுள்ளது. தீவிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்தில் அந்த மீன்பிடிக் கப்பல் செல்லும்போதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவத்துக்குப்பிறகு, அத்தீவுப் பக்கமாக இந்திய மீன்பிடிக் கப்பல்கள் செல்ல வேண்டாமென்று பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதுவரை இல்லாமல் திடீரென்று போர்ச்சுக்கல் இந்த பலாத்கார நடவடிக்கைஎடுப்பானேன்? தங்கள் கடல் எல்லை என்று அப்பகுதிகளை போர்ச்சுக்கல் மதிக்கின்றதா? மீன்பிடிக் கப்பல்கள் அங்கு வரப்படாதென்று முன் எச்சரிக்கை ஏதாவது செய்தனரா? இக்கேள்விகளுக்கான பதில் எப்படியிருப்பினும், போர்ச்சுக்கலின் இந்த அக்கிரம நடவடிக்கை, இந்தியாவை மட்டுமன்றிக் காலனி ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென்ற ஆர்வமுள்ள நாடுகள் அனைத்தையும் ஆத்திரமூட்டுவதாகும்.

"விநாசகாலே விபரீதபுத்தி" என்று வசனமுண்டு. நாசகாலம் நெருங்கும்போது புத்தியும் விபரீதமாகும். போர்ச்சுக்கலின் திமிர் அளவுமிஞ்சிவிட்டதென்பதற்கு இச்சம்பவங்கள் தக்க அடையாளமாகும். இதுவரை இந்தியா அதிக பொறுமை காட்டி வந்துள்ளது. அதன் பொறுமையும் "அகிம்சையும்" கையாலாகாததனம் என்று போர்ச்சுகல் நினைத்துள்ளதுபோலும். இச் சம்பவத்தை பாரதூரமானதென்று இந்திய அரசாங்கம் கருதி, ஆலோசனை செய்துவருவதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன. எப்படியும் இனி இந்தியா சும்மா இருக்கமுடியாது.

இதே சமயம் பம்பாயில் கூடிய கோவா விடுதலை மகாநாட்டில் திருமதி விஜயலட்சுமி பண்டிட் பேசுகையில், கோவா விடுதலைக்கான செயல் நடவடிக்கை எடுக்க வேண்டிய சமயம் இதுவென்று குறிப்பிட்டார். 'நம் வீட்டில் கள்ளன் புகுந்துவிட்டான். அவனை விரட்டப் பொலிஸிடம் கூறி நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே' என்று அமெரிக்காவிலிருந்த இந்திய மாஜி தூதர் திரு. சக்ளா கூறி, 15 வருடம் பொறுத்திருந்த இந்தியா, என்ன நடவடிக்கை எடுத்தாலும், எவரும் குறை சொல்லமாட்டார்கள் என்ருர். இந்த போர்த்துக்கீய ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்தியா இனியும் தக்க நடவடிக்கை எடுக்காவிடில், பாரத நாட்டின் மதிப்பு உலகிலே குறைவதுடன், அதன் சுதந்தரமும் ஆபத்துக்குள்ளாகும்.

# முத்தமிழ்வளர்க்கும் சுத்தானந்த பாரதியார்

"பைந்தமிழ்க் காவலர் வருக! இதோ தமிழாலயம்! இக்கோவிலின் பெரும் பரப்பில் ஒரு பகுதியைக் கடல் விழுங்கியது. எஞ்சி நிற்கும் இத்தொல் பெருங் கோயிலைத் தங்கமணிக் கோயிலாக்குவோம். இதற்கு ஒரு வெற்றிக் கோபுரம் எழுப்புவோம்" இவ்வாறு புத்துணர்ச்சியூட்டி வரும் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஈழமணித் திருநாட்டில் இன்று அறிவுரைகள் ஆற்றி வருகின்ருர்கள். பாரதியாரைப்பற்றி திரு. கே. கே. சீனிவாசன் எழுதியுள்ள கட்டுரை இங்கு வெளியாகியுள்ளது.

சுத்தானந்த பாரதியார் பழங்காலத் தமிழ் இலக்கியங்களை ஆழமாகக்கற்று ஆராய்ச்சி புரிந்தவர். தமிழ் மொழியில் மட்டுமின்றி வடமொழியிலும் வல்லுனர். அகில உலகம் போற்றும் ஆங்கில மொழியிலும், கடின மொழிகளாகிய பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும் புலமை பெற்றவர்.

### பேரறிஞர்

தமிழுலகுக்கு நன்மை புரிதலையே தமது வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டு உழைத்து வரும் அறிஞருள்ளே முன்னணியில் நிற்பவர் யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் ஆவார். கவிதையா, இசையா, கட்டுரையா. நாவலா, நாடகமா, மொழிபெயர்ப்பா எதையுமே ஒரு உணர்ச்சி வேகத்துடன் செய்து அளிப்பவர். இவருடைய பாடல்கள் இனிமை, எளிமை முதலிய குணங்களைக் கொண்டவை. அவைகளில் தேசபக்தி பொங்கித்ததும்பும். அறிவும், ஆற்றலும் செறிவுற்று விளங்கும் இவருடைய உரை நடையில் பல இயல்புகள் பழகி வருகின்றன. இனிமையான சொற்கள், சுருக்கமான தொடர்கள், ஆழ்ந்த கருத்துக்கள் இவைகளைச் சிறப்பாகக் கொண்டு புதிய முறையில் எழுதி வருகிருர்.

இறைக்குந்தோறும் ஊறுகின்ற மணற்கேணி போன்றவர். தமிழ் இலக்கியங்களில் உரம்பெற்றுள்ள இவரது அறிவாற்றல் புதுப்புது நூல்களாகப் பரிணமிக்கிறது. மடைதிறந்த ஆறு பாய்வதுபோல இனிய சுவை நிரம்பிய பல நூல்களை எழுதியிருக்கிருர்.

தமிழ் நாட்டில் தமிழ் படிக்க ஆயிரக்கணக்கில் மக்களைத் தயார் செய்து தந்தவர் என்று சுத்தானந்தபாரதியாரைச் சொன்ஞல் மிகையாகாது. இவரால் கையாளப்படாதவிஷயம் இல்லையென்றே சொல்லலாம். எழுத்திற்கு உதாரணமாக இவருடைய நூல்களில் எந்தப் பகுதியையும் எடுத்துப் பார்க்கலாம். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழியின் பொருள் அப்பொழுது விளங்கும். இவர் பழைய புலவர்களின் கடின நடையை விடுத்து, காலத்துக்கேற்ற எளிய நடையில் நூல்களை இயற்றியிருக்கிருர். சிறந்த அறிஞரான இவரிடத்தில் தமிழ் மொழி, மனித உணர்ச்சிகளைப் பற்பலவிதங்களில் வெளியிடும் கருவியாகப் பயன்படுகிறது.

இப்பொழுது அடிபடும் வடக்கு, தெற்கு ஹிந்தி போன்ற விஷயங்களைப்பற்றிக் கூடத் தமது நூல்களில் ஆங்காங்கே ஆணித்தரமான அபிப்பிராயங்களைக் கூறியுள்ளார்.

### 'மகா காவியம்'

சுத்தானந்த பாரதியாரின் 'பாரத சக்தி மகா காவியம்' உலகறிந்தது. இது மனிதன் பல துறைகளில் பூரணம் பெற்று அதிமனிதனுக, வாழும் வழிகள் அடங்கிய காவியச் சோலை. நீண்ட ஆராய்ச்சி செய்து வளையாபதி குண்டலகேசி இரண்டையும் காவியமாகவும், நாடகமாகவும் செய்து தந்துள்ளார். சீவக சிந்தாமணியின் இனிமையை 'காமதிலகன்' என்ற நாடகமாக அமைத்தார். 'சிலம்புச் செல்வம்' நாடெங்கும் புகழ் பெற்றது. அதைத்தொடர்ந்து வெளிவந்த "மணிமேகலையமுதம்' அமுதச்சுவை சொட்டச் சொட்ட அமைந்துள்ளது. 'அமுதகாவியம்' 'அருவி முழக்கம்' ஆகிய இரண்டும் ஷெல்லி, ஷேக்ஸ்பியர் போன்றவர்கள் அருளிய இலக்கியங்கள் போல் உயர்ந்த காவியமணிகள். அவற்றுள் தற்கால உலகும், பிற்காலப் புதிய மனித சமுதாயமும் பங்கு பெற்று விஞ்ஞான உலகின் ஞானச் செல்வமாக விளங்குகின்றன. 'நவரஸ நடனஞ்சலி' என்ற நாட்டியக்கலைப் பாட்டுக்களையும், 'கீர்த்தனஞ்சலி' என்ற இசைப்பாடல்களையும் இயற்றி நாட்டியக் கலைக்கும், இசைக் கலைக்கும் பணி புரிந்துள்ளார். 'விக்டர் ஹயூகோ'வின் மிகச் சிறந்த 'Les Miserable' எனும் நாவலை 'ஏழைபடும்பாடு'என்ற பெயரில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இவ்வாறு இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் முறையாக வளர அரும்பாடுபட்டு வருபவர் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

### 'முன்னேறுவோம்'

'தமிழ் உணர்ச்சி', 'வீரத்தமிழருக்கு — ஆவேசக் கடிதங்கள்' இவையிரண்டும் இவருடைய மிகச்சிறந்த நூல்களாகும், 'தமிழ் உணர்ச்சி' என்ற நூலில், கல்வி, கலை, கவிதை, இசை, நாடகம் அனைத்திலும் தமிழ் சிறப்புற்று, உலகில் மதிப்புறவேண்டும். தமிழ்க் கலை வடக்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் கதிர்விரிந்து பரவ வேண்டும். சாதிச்சண்டை சமயப்பெரும்போர், வாதுவழக்கு, வேற்றுமை, பொருமை, சிறுமை, அகந்தை, வறுமை, மடமை, சோம்பல் முதலியவற்றை ஒழிப்போம். தடைகளைத் தகர்த்து முன்னேறுவோம் என உணர்ச்சியுடன் எழுதியுள்ளார்.

'வீரத்தமிழருக்கு—ஆவேசக் கடிதங்கள்' என்னும் நூலில் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றியும் இடை இடையே குறிப்பிடுகிருர் ஒரு இடத்தில் 'தமிழன்னையை உலகின் முன் பெருமைப்படுத்தும் ஒரு பொன் மணி மகுடத்தை நீண்ட காலமாகத் தயாரித்து வருகிறேன். பாரதசக்தி- இதுவே அதன் பெயர். இப்பெருங்காப்பியத்தைத் தமிழில் வெளியிட்டு, ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து உலகிற்கு தந்துவிட்டால் எனது தவம் முடிந்தது. பிறகு என் ஒவ்வொரு மூச்சையும் பொதுநலத் தொண்டாக்கலாம். திருவருளைத் துணைக்கொண்டு நடப்பன நடக்கட்டும்" என்று கூறுகிருர் ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

# மேலும் ஆறு தேயிலைத் தோட்டங்களாரம்பிக்கப்படும்

## அமைச்சர் தகவல்

பெல்வத்தை, திங்கள்

பெல்வத்தையிலுள்ள அரசாங்க கார்ப்பரேஷன் தேயிலைத் தோட்டத்தைப் போல மேலும் ஆறு தேயிலைத் தோட்டங்களை கார்ப்பரேஷன் ஆரம்பிக்கவிருக்கின்றதென விவசாய காணி அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா பெல்வத்தை தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

பெல்வத்தை தோட்டத்தில் நடைபெறும் வேலைகளைப் பார்வையிடச் சென்ற எம். பி. களுக்கும் கார்ப்பரேஷன் டைரக்டர்களுக்கும் இத்தகவலை அமைச்சர் ஸி. பி. டி' சில்வா தெரிவித்தார். தனிப்பட்டவர்களின் தோட்டங்களை எடுப்பது தமது அமைச்சின் நோக்கமல்லஎனவும் திறம்தேயிலையை உற்பத்தி செய்வதில் அரசாங்கம் தனிப்பட்டவர்களுடன் போட்டியிடும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பெல்வத்தைத் தோட்டத்தைப் பார்வையிடச் சென்றவர்களில் ஒருவரான நியமன அங்கத்தவர் திரு. எஸ். தொண்டமானைப் பார்த்து, "உங்களுடைய தேயிலைத் தோட்டங்கள் எனக்கு வேண்டியதில்லை. ஆனல் உங்கள் பணத்தை மாத்திரம் எடுத்துக் கொள்வேன்" எனக் கூறினர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அமைச்சர் கூறியதாவது:-

"கார்ப்பரேஷனின் அபிவிருத்தி உங்களிலேதான் பெரிதும் தங்கியிருக்கிறது. உங்களின் பூரண ஒத்துழைப்பு எனக்குக் கிடைக்குமானல் மேலும் அதிகமான தோட்டங்களை கார்ப்பரேஷன் நடத்தும். இதனல் எத்தனையோ தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது சாத்தியமாகும். நாட்டின் செல்வத்தைப் பெருக்கி வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்கும் நோக்கத்துடனேயே அரசாங்கம் கார்ப்பரேஷனை ஏற்படுத்தியுள்ளது.

அலவத்தை எம். பி. அனில் முனசிங்கா பேசும்போது தொழிலாளரின் ஒத்துழைப்புத் தாராளமாகக் கிடைக்குமென்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லையெனக் குறிப்பிட்டார்.

## அந்நிய உதவி குறைந்து விடும்

### மொரார்ஜி விளக்கம்

புதுடில்லி, நவ. 27

அடுத்த பத்து வருட காலத்துக்குள் அந்நிய நாடுகளிடமிருந்து பாரதம் பெறும் உதவி குறைந்துவிடுமென்றும் அந்நிய நாடுகளுக்கு பாரதம் அளிக்கும் உதவி அதிகரிக்குமென்றும் இந்திய நிதிமந்திரி திரு மொரார்ஜி தேசாய் தெரிவித்தார்.

பத்து வருட காலத்தில் பாரதம் விவசாயத் துறையில் தன்னிறைவு பெற்று விடுமென்றும் தேசாய் கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

நாளை புதன் கிழமை நாவலர் பெருமான் குருபூசை இதை நேற்று வந்த ஓர் அன்பர் எனக்கு நினைவு மூட்டி, நாவலரின் குருபூசையை நடத்துவது மட்டும் போதாதென்றும் அவரது உருவச்சிலையை, யாழ்ப்பாணத்தில் தாபிக்க வேண்டுமென்றும் உணர்ச்சியுடன் கூறினர்.

இந்த யோசனை புதிதல்ல நாவலர் பெருமானின் உருவச் சிலையை ஸ்தாபிக்க வேண்டுமென்று, யாழ்ப்பாண மாநகர சபையிலும் ஒரு தீர்மானம் வந்தது. நூல் நிலையத்தில் அதை அமைக்கலாமென்றும் யோசனை கூறப்பட்டது. ஆனல் இதுவரை எதுவும் செய்யப்படவில்லை. இது பெரிய குறையாகும்.

* * *

தனக்கென வாழாமல் பிறருக்காக, சைவத்துக்கும் தமிழுக்குமாக வாழ்ந்தார் நாவலர் பெருமான். அவரால் ஈழநாட்டின் பெருமை தமிழகத்திலும் பரவியது. இன்றும் நாவலரின் பெயரைச் சொன்னல் தமிழகம் கைகூப்பி வணங்குவதைப் பார்க்கலாம்.

சைவ சமயத்துக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை எப்படி வீரத்துடன் அவர் எதிர்த்துப் போராடினர் என்பதையும், சைவத்தையும் தமிழையும் வளர்க்க ஆக்க முறையிலே அவர் என்னென்ன முயற்சிகள் செய்தார் என்பதையும், அவர் செய்த பணிகள் மூலம் ஈழத்தையும் தமிழ்நாட்டினையும் எப்படிப் பிணைத்தார் என்பதையும் நினைக்கையில், அவர் எவ்வளவு பெரிய 'மகாத்மா' என்பது விளங்கும்.

* * *

வண்ணை சிவன்கோவிலில் தான் நாவலர் பெருமான் முதன் முதல் சமயப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாராம். அங்குள்ள தட்சணாமூர்த்தி சந்நிதானத்தில் நாவலர் அமர்ந்து தினசரி யானம் செய்வாரென்று ஓர் அன்பர் மூலம் அறிந்ததும், அக் கோவிலைப் பற்றிய மதிப்பு என் மனதில் பெரிதும் உயர்ந்தது. கோவில்கள் தான் சமூகத்தின் உயிர் நிலையங்கள். அவற்றின் மூலம் நல்லறங்களை வளர்த்து, சமூகத் தொண்டுகள் எவ்வளவோ செய்யலாம். கூட்டுப் பிரார்த்தனை முதலிய நற்பணிகள் இக் கோவில் மூலம் வளருவதாயின், அது நாவலர் பெருமானின் ஆத்மாவுக்குப் பெருமகிழ்ச்சியாக இருக்கும். திருக்கேதீச்சரத்தைப் பற்றி அவர் கண்ட கனவுகள் இப்போது கைகூடி வருகிறது. சமயம், கல்வி முதலிய விஷயமாகவும் அப்பெரியாரின் உள்ளக் கிடக்கை மெதுவாக நிறைவேறுவதற்கான அறிகுறிகளைப் பார்க்கிறோம். அவர் போட்ட நல்வித்துக்கள், முளைத்துப், பூத்துக் காய்த்து, பழுத்துப் பயனளிக்கும் காலம் வருமென்பது நிச்சயம். இவ் விஷயமாக உழைத்து தொண்டாற்றுபவர்களே, அப் பெரியாரின் ஞாபகத்தை உண்மையில் போற்றுபவராவர்.

* * *

உருவச் சிலை வைப்பது நாவலருக்கு நாம் செய்யும் கைமாறல்ல. அவரை மறவாமல் நமக்கு நாமே செய்துகொள்ளும் உதவியாகும். 'ஐந்தாங் குரவர்' என்று கூறப்படும் நாவலர் பெருமானின் உருவச் சிலையை மிகப் புனிதமான இடத்தில் வைக்கவேண்டும். வண்ணை சிவன் கோவிலுக்கு எதிரே அழகான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் மத்தியிலே,ஸ்ரீ வைதீச்ச மகாலிங்கத்தை தரிசித்தபடி, நாவலர் பெருமானின் உருவச்

(8 ம் பக்கம் பார்க்க)

# அல்ஜீரியாவில் மீண்டும் கலகம்

## மூவர் பலி; 11 பேர் காயம்

லண்டன், நவ 27

ஆல்ஜீரியாவில் மீண்டும் பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

ஓரானில் இருகோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மூவர் கொல்லப்பட்டனர். பதினொரு பேர் காயமடைந்தனர்

அல்ஜீரியர்சில் ஐரோப்பியர் சிலர் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தினர்.

கொனஸ்டன்டைனில் குண்டு வெடிச்சம்பவங்கள் பலமடைந்தன.

---

# 'ஐ. நா. வை எதிர்க்கத் தயாராகுங்கள்'

## கடாங்கா மக்களுக்கு ஷோம்பேவேண்டுகோள

எலிஸபெத்வில்லி, நவ. 27

ஐ. நா. வுடன் போர் செய்வதற்குத் தயாராக இருக்குமாறு கடாங்கா மக்களுக்கு அதிபர் ஷோம்பேநேற்று வேண்டுகோள்விடுத்தார்.

பாலங்களை உடைக்கவும், விமான நிலையங்களைத் தாக்கவும், கடாங்காப் படைகள் தயாராக இருப்பதாகவும் திரு. ஷோம்பே தெரிவித்தார்.

ஐ. நா. படைகளை எதிர்த்துப் போரிடுவதற்கு உரிய சமயத்தில் தாம் கட்டளையிடுவதாக திரு. ஷோம்பே கூறினர். எச் சமயத்திலும் எதற்கும் தயாராக இருக்குமாறு திரு. ஷோம்பே கடாங்கா மக்களைக் கேட்டுக்கொண்டார்.

எலிஸபெத்வில்லியில் ஒரு பொதுக் கூட்டத்தில் திரு. ஷோம்பே பேசினர்.

கடாங்காவிலிருந்து அந்நிய அதிகாரிகளை வெளியேற்றுவதற்கு அவசியமானல் பலாத்காரத்தை உபயோகிக்கவும் தலைமைக் காரியதரிசிக்கு அதிகாரமளிக்கும் பாதுகாப்புத் தீர்மானத்தை திரு. ஷோம்பே மீண்டும் வன்மையாகக் கண்டித்தார்.

---

# செஸ்டர்பவல்ஸ் பதவி மாற்றம்

## 10 உயர்பதவிகளில் கென்னடி சீர்திருத்தம்

### ஹரிமனுக்கு வேறுபதவி

வாஷிங்டன், நவ. 27

அமெரிக்க ராஜாங்க காரியாலயத்திலும் வெள்ளைமாளிகையிலும் உயர்பதவிகளில் பெரும் மாற்றங்களை ஜனதிபதி கென்னடி செய்துள்ளார்.

அதிக பொறுப்புள்ள பணிகளை அளிப்பதற்காகவே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ராஜாங்க காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உதவி ராஜாங்க மந்திரி பதவிவகித்த திரு. செஸ்டர் பவல்ஸ அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் அதிக பொறுப்பும் அதிகாரமும் நிறைந்த பதவியில் நியமிக்கப்படுவார்.

ஜனதிபதியின் விசேஷ தூதரும் ஜெனிவாவில் லாவோசுக்கான சர்வதேசக் கமிஷனின் மகாநாட்டில் அமெரிக்க தலைமைப் பிரதிநிதியுமான திரு. அவரேல் ஹரிமன் ராஜாங்க காரியதரிசியின் உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராஜாங்க காரியாலயத்திலும் வெள்ளை மாளிகையிலும் மொத்தம் பத்து உயர்பதவிகளில் ஜனதிபதி கென்னடி மாற்றம் செய்துள்ளார்.

---

# கோவாபற்றி இந்திய கொள்கையில் மாறுதல்

## பம்பாய் மகாநாடு வரவேற்பு

பம்பாய், நவ. 27

பம்பாயில் இரண்டு தினங்களாக நடைபெற்றுவந்த கோவா அரசியல் மகாநாடு இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியதுடன் முடிவடைந்தது.

கோவாபற்றி பிரதமர் நேரு சமீபத்தில் விடுத்த அறிக்கை கோவாபற்றி இந்திய அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றத்தைக் குறிப்பதாகவும் பிரதமரின் அறிக்கையை மகாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகவும் முதல் தீர்மானம் கூறுகிறது. கோவா, டாமன், டியூ ஆகிய பாரதத்தின் பகுதிகளை விடுவிக்க பாரத யூனியன் மககளும் அரசியல் கட்சிகளும் உதவி புரிய வேண்டுமென்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

இரண்டாவது தீர்மானம் போர்த்துக்கீஸியரின் ஆதிக்கத்தை எதிர்த்து அங்கோலாவில் வீரப் போர் புரியும் மக்களைப் பாராட்டியும் அங் கோவா மக்களுக்குக் காட்டும் ஒத்துழைப்பும் ஆதரவும் கோவாவை விடுவிப்பதுதானென்றும் கூறுகிறது.

---

# தியேட்டருக்கு கல்லெறி

காலி, திங்கள்

ஆத்திரங் கொண்ட சனக்கூட்டமொன்று குயின்ஸ் தியேட்டருக்கு கல் வீசியதன் காரணமாக பொலிசார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்டனர். சினிமாவுக்குச் சென்ற ஒருவருக்கு டிக்கற் கொடுக்க மறுத்து அவரை வெளியேற்ற முயன்றபோதே இச்சம்பவம் ஏற்பட்டது.

---

# கதிரியக்க வீச்சினல் புற்று நோய் கூட ஏற்படலாம்

## அணுசக்தியால் நன்மையும் உண்டு கெடுதலும் உண்டு

ஹிடல்பர்க். நவ. 26

அணுசக்தியினல் வைத்தியத் துறையில் சாதகங்களும் உண்டு. பாதகங்களும் உண்டு என்கிற விஷயம் ஒரு ஜெர்மன் வைத்திய சஞ்சிகையில் விளக்கப்பட்டுள்ளது, ஹாம்பர்க்கில் பிறந்த, 1,75,000 குழந்தைகளைப் பரீட்சித்ததில் கதிரியக்க வீச்சினல் அவைகளில் எதுவும் அதிர்ஷ்டவசமாகப் பாதிக்கப்படவில்லை. ஆனல் பெர்லினில் பிறந்த குழந்தைகள் கதிரியக்க வீச்சினல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து அணுக்குண்டு வெடித்த இடத்திற்கும் அதற்கு சமீபத்திலுள்ள இடங்களுக்குமுள்ள தூரம் கவனிக்கப்பட வேண்டுமென்பது தெரிய வருகிறது. கதிரியக்க வீச்சு காரணமாக, வெண்குஷ்டம், மற்றும் இரத்த சம்பந்தமான வியாதிகளை மட்டுமன்றி புற்று நோய் கூட ஏற்படலாம் என்பது இப்போது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஹிரோஷிமாவில் அணுக்குண்டு வெடித்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருந்தவர்களுக்கு மிக ஆபத்தில் முடியக் கூடிய கட்டிகள் கிளம்பின என்பதை ஜப்பானிய ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹிடல்பர்க் பல்கலைக் கழகத்தில் "கதிரியக்க அயோடின் 131"ஐ உபயோகிப்பதன் மூலம் மூத்திரக் காயில் ஏற்படும் வியாதிகளை கண்டு பிடிக்க முடியும் என்பதை நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் வான்யூலர் தெரிவித்துள்ள தகவல்களின் படி சில ரகப் புற்று நோய்கள் ஏற்பட எது காரணம் என்பது கண்டுபிடிப்பது எளிதாகிவிடும் என்று சொல்லப்படுகிறது.

அம்மைப் பாலிலுள்ள கண்ணுக்குத் தெரியாத "வீரஸ்" எனப்படும் கிருமிகள் ஒன்றுடன் ஒன்று உறவு கொள்ளவும் செய்யும், ஒன்றை ஒன்று எதிர்க்கவும் செய்யும் என்பதை மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சியாளர் டாக்டர் வைகாட் கண்டு பிடித்துள்ளார். இந்த "வீரஸ் பிராணி, தாவர உலகங்களில் அதிக ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த "வீரஸ்"கள் ஒன்று சேர்ந்து நோய் ஏற்படாமல் தடுக்கவும் கூடும். ஒன்றுடன் ஒன்று எதிர்த்து வியாதியை ஒழிக்கும் பலனில்லாமலும் செய்துவிடக் கூடுமாம். இதுவரை விஞ்ஞானம் மனித குலத்துக்கு ஆபத்து ஏற்படக் கூடிய 152 "வீரஸ்"களைக் கண்டுபிடித்திருக்கிறது. இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள புது தகவல் காரணமாக சிகிச்சை முறைகளில் புது வழிகள் ஏற்படக் கூடும்.

---

# 'பிரதேச சேனையில் சேருக'

## இளைஞர்களுக்கு நேரு வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 27

பிரதேச சேனையின் வருடாந்த விழா வைபவமொன்றில் பிரதமர் ஸ்ரீ நேரு நேற்றுப் பேசுகையில் இச்சேனையில் இளைஞர்கள் சேர முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

நாட்டுப் பற்றுடன் மக்கள் இச்சேனையில் சேர்ந்து நாட்டைப் பாதுகாக்க முன் வர வேண்டுமென்று நேரு கூறினர்:

---

# "தொழிலாளர்கள் தலைவர்களாகவேண்டும்"

## இ. தொ. கா. பிரமுகர் யோசனை

நாவலப்பிட்டி திங்கள்

தொழிலாளர்களே தொழிற் சங்க தலைவர்களாக இருக்க வேண்டுமென்பதுதான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் லட்சியம். இந்த லட்சியம் நிறைவேற தொழிலாளர்கள் கல்வி அறிவை வளர்த்து தொழில் சங்க தேர்ச்சி பெறவேண்டும்" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்ட ஆதரவில் நடைபெற்ற சங்குவாரி மேற்கணக்கு வருடாந்த தேர்தல் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய மாவட்ட் பிரதிநிதி திரு. எம். பி. வீரையா தமது தலைமையுரையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

வாங்கும் சம்பளத்தை வகையோடு செலவு செய்யும் பழக்கத்தை நாமும் பழகிக் கொள்ளவேண்டும். தீய பழக்கவழக்கங்களை தொழிலாளர்கள் மாற்றி கொள்ள வேண்டும். இதை மாற்றிக் கொள்ளத் தவறினல் நாம் சமுதாயத்தில் பின்தங்கிய சமூகமாகவே தான் வாழவேண்டியிருக்கும். தனிமனிதன் ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டால், நமது சமூகம் இன்றைய தாழ்வான நிலையிலிருந்து உயர்ந்துவிடும். பொதுவாழ்க்கையில் சகிப்புத் தன்மையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் இருக்க வேண்டும். தொழிலாளர்களுக்கிடையில் ஒற்றுமை குறைந்தால் தொழிலாளர்களின் சக்தி குறைந்து தொழிலாளர்களின் சக்தி பலஹீனமாகிவிடும். ஆகவே தொழிலாளர்கள் ஒற்றுமையை வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேணடும்.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆர். ஆறுமுகம், காரியதரிசி என். ஆர். கிருஸ்ணசாமி, பொக்கிஷதார் என். சுப்பிரமணியம், கலக்டர் எஸ். வி. சண்முகம்.

**கமிட்டி அங்கத்தினர்கள்**

எம். சுப்பையா, வி. முருகையா, டி. முத்தையா, வி. சுப்பையா, ஆர். கருப்பையா, டி. முத்தையா, கே. இராமையா, ஐ. கருப்பையா.

---

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# 152 கிராமசேவகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை

## டிசம்பர்; ஜனவரிமாதங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

இப்போதுள்ள கிராமத் தலைமைக்காரர் முறையை நீக்கி அதற்குப்பதிலாக கிராம சேவகர்களை நியமிக்கும் புதிய திட்டத்திற்கிணங்க கடந்த ஜூலை மாதம் 22-ம் திகதி நாடுமுழுவதிம் ஓர் பகிரங்கப் பரீட்சை நடாத்தப்பட்டது.

இலங்கை முழுவதிலும் 3,178 கிராம சேவகர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இவ்வாண்டு டிசம்பர் மாதத்திலும், அடுத்தாண்டு முற்பகுதியிலும் அவ்வப்பகுதிய காரியாதிகாரி பிரிவுகளில் நடைபெறவிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மாத்திரம் 152 கிராம சேவகர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர். பகிரங்கப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அத்தனைபேரும் நேர்முகப் பரிட்சைக்கு அழைக்கப்படுவார்களெனத் தெரிகிறது.

### நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிகள்

நெடுந்தீவு டிசம்பர் மாதம் 8-ம் திகதியும், தீவுப்பகுதிகள் டிசம்பர் 20-ம் 28-ம், ஜனவரி 8-ம்திகதிகளிலும்யாழ்ப்பாணம் டிசம்பர் 19-ம், 27-ம் ஜனவரி 6-ம் திகதிகளிலும், வலிகாமம் மேற்கு ஜனவரி 12-ம், 15-ம் திகதிகளிலும், வலிகாமம் வடக்கு டிசம்பர் 22-ம், ஜனவரி 6-ம், 16-ம் திகதிகளிலும், வலிகாமம் கிழக்கு டிசம்பர் 15, ஜனவரி 10-ம் திகதிகளிலும், தென்மராட்சி டிசம்பர் 11-ம் 18-ம் திகதிகளிலும், வடமராட்சி டிசம்பர் 13, ஜனவரி 5, 12, 17-ம் திகதிகளிலும், பச்சிலைப்பள்ளி டிசம்பர் 26-ம் திகதியிலும், பூநகரி டிசம்பர் 14-ம் திகதியிலும், கராச்சி—துணுக்காய் ஜனவரி 4-ம் திகதியிலும், யாழ்ப்பாணம் மாவட்ட கிராம சேவகர்கள் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரிவுவாரியாகத் தெரிவு செய்யப்படவிருப்போர் தொகை:

நெடுந்தீவு 3, தீவுகள் 16, யாழ்ப்பாணப் பிரிவு 12, வலிகாமம் மேற்கு 17, வலிகாமம் வடக்கு 20, வலிகாமம் கிழக்கு 10, தென்மராட்சி 22, வடமராட்சி 25, பச்சிலைப்பள்ளி 11, பூநகரி 8, கராச்சி — துணுக்காய்8.

### வவனியாவில்

வவனியாப் பகுதியிலுள்ள கிராமசேவகர்களுக்கு வருகிற மாதம் 6ம் தேதி வவனியா கச்சேரியில் நேர்முகப்பரீடசை நடைபெறவிருக்கிறது. வவனியாதெற்கு தமிழ்பிரிவு காரியாதிகாரி பதவிக்கு139பேர்களும். வவனியா வடக்குக் காரியாதி பதவிக்கு 99 பேர்களும், காரியாதிகாரி பிரிவுக்கரையோரப் பற்று 62 பேர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக மூன்றுபிரிவுக்கும் 32 கிராமசேவகர்களே தெரிவுசெய்யப்படுவர்.

---

# சுத்தானந்தருக்கு ஆத்ம ஜோதியில் வரவேற்பு

நாவலப்பிட்டி, திங்கள்

மாத்தளை. கண்டிப்பகுதி வரவேற்புகள் முடிந்தபின் சனிக்கிழமை இரவு பத்து மணியளவில் நாவலப்பிட்டிக்கு விஜயம் செய்த கவியோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியாருக்கு ஆத்ம ஜோதி நிலைய அன்பர்களால் பக்தி சிரத்தையுடன் வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. ஆத்ம ஜோதி நிலையம் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூரண கும்பம் வைத்து மலர்மாலை அணிந்து வரவேற்ற பின் ஸ்ரீசுத்தானந்த பாரதியார் தீபாராதனை செய்து நல்லாசி கூறினர்.

---

# அக்கரைப்பற்றில் வெள்ளம் வடிகிறது

அக்கரைப்பற்று

அக்கரைப்பற்றுப் பகுதியில் இப்போது வெள்ளம் வடிந்து வருகின்றது.பெருமழை ஓய்ந்து விட்டது.

# சீன ஆக்கிரமிக்கையில் கோவாபற்றி பேசுவதுகேலிக்கூத்து

## சுதந்திராகட்சிக் கூட்டத்தில் ராஜாஜி உரை

ஆக்ரா, நவ. 26

சுதந்திரா கட்சியின் பிரதிநிதிகள் கூட்டத்தில் சீன பற்றிய கட்சியின் தீர்மானம் நிறைவேறியது. இதை ராஜாஜி பிரேரித்தார்.

தேசத்தின் வட எல்லை நிலைமைக்குப் பிரதமமந்திரிநேருவை பொறுப்பாளியாக்கும் திருத்தம் ஒன்று வாபஸ் பெறப்பட்டது. இந்திய எல்லையில் சீன ஆக்ரமிப்பை பலாத்காரத்தை பயன்படுத்தி அகற்ற வேண்டும் என்று கோரும் மற்றொரு திருத்தம் வோட்டுக்கு விடப்பட்டதில் தோற்றது.

முதல் திருத்தத்தை பிரேரித்த மேஜர் கே. எஸ். சிங் (பஞ்சாப்) பேசுகையில் சீன சம்பந்தமாக நமது கொள்கையில் குழப்பம் ஏற்படுவதற்கு பிரதம மந்திரி நேருவே பொறுப்பாளி என்றூர் எல்லைப் பகுதிகளில் ரஸ்தாக்களை நிர்மாணிக்கவும், காவல் நிலையங்களை அமைக்கவும் ராணுவத்தினர் தெரிவித்த யோசனைகளைக் கடந்த காலத்தில் நேரு அலட்சியம் செய்து விட்டதாகவும் ஏனெனில் இந்தியாவும், சீனவும் நண்பர்கள் என அவர் நினைத்ததாகவும், வேறு நாடாக இருந்தால் அவரது நடவடிக்கைக்காக குற்றம் சாட்டப்பட்டிருப்பார் என்றும் மேஜர் சிங் குறிப்பிட்டார்.

விவாதத்தில் குறுக்கிட்டு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி பேசுகையில் சொன்னதாவது: இத்திருத்தத்தில் புதைந்து கிடக்கும் உள்ளுணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். எனினும் இத்தீர்மானத்தை உருவாக்கும் முறை இதுவல்லவென்று கூற விரும்புகிறேன். இது நேருவின் மீதான கண்டன. பிரேரணையல்ல. இது சீனவைப் பற்றிய தீர்மானம், இதனை கலப்படம் செய்யாதிருப்போமாக.

எல்லை நிலைமைக்கு இந்திய சர்க்கார்தான் பொறுப்பாளி என்று தீர்மானத்தில் உள்ளடங்கியிருக்கிறது. நேரடிக் குற்றச்சாட்டை விட மறைமுக குற்ந்ச் சாட்டு அதிகபயனுள்ளதாயிருக்கும் என்றூர்.

இப் பிரச்சினை சம்பந்தமாக ஸ்ரீ கிருஷ்ணமேனனை ஆரம்பத்தில் ஸ்ரீ உதம்சிங் நாகோக் குறை கூறியதை ராஜாஜி குறிப்பிடுகையில் நேரடியாக யாரையும் தாக்கலாகாது என்றும், நேருவின் கருவிதான் ஸ்ரீ மேனன் என்றும் சர்க்கார் முழுவதற்கும் ஸ்ரீ நேருவே பொறுப்பாளி என்றும் கூறினூர். சர்க்காரின் கொள்கைகளை கண்டிப்பது தான் மிக முக்கியமானது என்றூர்.

ராஜாஜி மேலும் பேசுகையில்,

இது சம்பந்தமாக இந்திய ராணுவ தளபதிகளிடையே தீவிர உணர்ச்சி நிலவுவதாக அறிந்து தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்து, நமது தேசத்தின் கொள்கையை நிறைவேற்றிவைக்கவும் கருவிகள் அவர்களே என்றூர்.

இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு மேல் எதுவும் சொல்லக்கூடாது என்றும், ராணுவ நடவடிக்கை தந்திரத்தை உத்தேசித்து அது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மேடையிலிருந்து சீன எதிர்ப்பு நடவடிக்கைகள் பூராவையும் எடுத்துக் கொள்ள முடியாதென்றும், சர்க்காரால்தான் ராணுவ நடவடிக்கைகளை எடுக்க முடியுமே ஒழிய, எதிர்க் கட்சிகளால் அல்லவென்றும் அவர் சுட்டிக் காட்டினூர். எனவே தான் இன்னும் சுறுசுறுப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யோசனை கூறுவதுடன் நின்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

"நம்மிடம் வசதிகளில்லாததால், நாம் சண்டை போடுவதற்கில்லை என்று சொல்லப்படுகிறது.

செயலில் பலத்தைக் காட்டாமல் வாய்ச் சொல்லில் பலத்தைக் காட்டிக் கொண்டிருப்பது மோசமாகும். உண்மையை விரைவில் சொல்லி விட்டு என்ன செய்யப் போகின்ரேம், என்ன செய்யப் போவதில்லை என்பதை எடுத்துரைத்து விடுவதுதான் எப்போதுமே நல்லது.

'நம் நாட்டுக்கு எதிராக தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடத்தி வருவதென்று சீன உறுதி பூண்டுள்ள நிலைமையில், கோவா சம்பந்தமாகப் பொலிஸ் நடவடிக்கை எடுப்பது பற்றிப் பேசிக்கொண்டிருப்பது கேலிக் கூத்தாகும்'' என்றூர்.

---

# "சமாதான வீரர்" நேருஜிக்கு யு. எஸ். பாப்டிஸ்ட் தலைவர் பாராட்டு

புதுடில்லி, நவ. 26

யு. எஸ். ஸில் 50 லட்சம் மக்களுககுப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தேசிய பாப்டிஸ்ட் கன்வென்ஷன் (சிகாகோ) தலைவர் ஸ்ரீ ஜே. எச். ஜாக்ஸன் பிரதமர் நேருவை சந்தித்து, சமாதானச் செய்தி ஒன்றைக் கொடுத்தார்.

ஆசியாவிலும், உலகின் மற்றப் பாகங்களிலும் சமாதானத்தின் ஆக்க சக்தி என்ற தன்மையிலும், தலைவர் என்ற தன்மையிலும் ஸ்ரீ நேருவை அச் செய்தி பாராட்டுகிறது.

உலகம் ஒரு தார்மீக அமைப்பு, அதன் உருவான அம்சம் சமாதானம். தார்மீக ஆயுதம், ஆன்மீக சக்தி ஆகியவை மூலம் அதை அடையலாம் என்று நம்பும் உலக சமுதாயத்தின் உறுப்பினர் என்ற தன்மையில் தான் பேசுவதாக ஸ்ரீ ஜாக்ஸன் குறிப்பிட்டார்.

அவருடைய செய்தி மேலும் கூறுவதாவது:- அத்தகைய சக்திகள் ஒரு தேசத்தை எவ்வாறு சமாதானத்தில் நிலைநிறுத்தமுடியும் என்பதற்கு இந்தியக் குடியரசு ஒரு உருவான உதாரணமாக விளங்குகிறது. இந்தியாவிலும் உலகிலும் உள்ள தார்மீக, ஆத்மீக சக்திகள் சமாதானம், சர்வதேச நல்லெண்ணம், மக்கள் சுதந்திரம் ஆகியவற்றின் வீரராக நேருவை முன்னணிக்குக் கொண்டுவந்துள்ளன ஆகவே, இந்திய மக்களுக்கும், உலகுக்கும் அவர் சொந்தமாவார்.

உங்கள் நேர்மையிலும், அபிப்பிராயத்திலும், சர்வதேச சகோதரத்துவத்தில் ஈடுபாட்டிலும் நாங்கள் பெரும் நம்பிக்கை வைத்துள்ளோம் என்று செய்தி கூறுகிறது.

---

## ருஷ்யாவில்...

நூறு மெகாதொன்வலுர நிறையுள்ள அணுக்குண்டுகள் சலவாயுக் குண்டுகளைச் செய்து ருஷியா சேமித்து வைத்திருக்கிறதென்று சோவியத் ரொக்கெற் நிபுணர் ஜெனரல் வி. எவ். தொலுப்கோ 'சிவப்பு நட்சத்திரம்' என்ற பத்திரிகையில் எழுதி, இதையிட்டு அமெரிக்காவிலுள்ள எவரும் சந்தேகம் கொள்ள வேண்டாமென்றும் தெரிவித்திருக்கின்றூர்.

ருஷியா வருகிற தைமாதம் வரையில் ஒரு மனிதனுடன் கூடிய ஆகாயவெளிக் கப்பல் ஒன்றை அனுப்பத் திட்டமிடுவதாக மாஸ்கோவிலிருந்துஒரு செய்தி வந்திருக்கிறது. இது சந்திரனைச் சுற்றிக் கொண்டு ஐந்து நாட்களாகச் சந்திர மண்டலப் பிரயாணஞ் செய்துவிட்டுத் திரும்பவும் பூமியில் வந்து சேருமாம்.

# 'அரசாங்கம் ஒரு அச்சுறுத்து'

கொழும்பு, ஞாயிறு

நாட்டின் சமயகாரியங்களுக்கு அரசாங்கம் ஓர் அச்சுறுத்துதலாகிவிட்டது. சட்டத்தைக் கொண்டு சமயத்தைப் பாதுகாப்பது முடியாத காரியமென்பதை உய்த்துணர்வது அரசாங்கத்துக்குப் புத்தியான ஒரு செயலாகும். சமய காரியங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது; அவற்றைப் புத்த குருமாரோடும், புத்த மக்களோடும் விட்டுவிட வேண்டுமென்று வித்தியாலங்கார சர்வகலாசாலைப் பேராசிரியர் ஸ்ரீசீவாலி தேரோமகாரகாமாவில் புத்த பிக்குகள் ஸ்தாபனத்தில் பேசும்போது கூறினூர்.

---

# கோடீஸ்வரர் இல்லை

கொழும்பு, திங்கள்

இலங்கையிலே கோடீஸ்வரர் எவருமேயில்லை;சென்றவருடத்தில் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதித்தவர் இல்லை; ஒருவர் மட்டும் ஏறக்குறையப் பத்து இலட்சம் ரூபா சம்பாதித்தாரென்று வருமானவரிப்பகுதித் தலைவரின் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒருவரும் முதலீடுகள் மூலமே 8 லட்சத்து 73 ஆயிரத்து 847 ரூபா சம்பாதித்தாராம்.

# சுதந்திராகட்சியுடன் "கணதந்திரபரிஷத்" இணைந்தது

## தலைவர்கள் கூட்டறிக்கை

புதுடில்லி, நவ. 26

சுதந்திராகட்சியும் கணதந்திர பரிஷத்தும் ஒன்ருக இணைவதெனத் தீர்மானிக்கப்பட்டது. சுதந்திராகட்சித் தலைவர் பேராசிரியர் ரங்காவும், கணதந்திரபரிஷத் சார்பாக டாக்டர் ஆர். பி. மிஸ்ராவும் இந்த உடன்பாடு குறித்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

ஒரிஸ்ஸாவில் கணதந்திர பரிஷத்துக்குப் பதில் சுதந்திராகட்சியை அங்கீகரிக்க வேண்டுமென்ற நிபந்தனை ஏற்கப்பட்டதாயும், உடனடியாக சுதந்திராகட்சி அங்கு அங்கீகரிக்கப்பட்டால் இரு கட்சிகளும் தேர்தலுக்கு முன் இணையும் என்றும், தேர்தலுக்குப் பின் அங்கீகரித்தால் வெற்றி பெற்ற கணதந்திரபரிஷத் சட்டசபை அங்கத்தினர்கள் சுதந்திராகட்சியில் சேர்ந்து விடுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

---

# மேற்றிராணிக்கும் அதிகாரம் முடக்கல்

பம்பாய், நவ. 26

கோவாவிலுள்ள கிறிஸ்தவர்களிடம் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாமல், கார்டினல் கிரேஸியஸின் அதிகாரங்கள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக முன்னுள் தூதர் ஸ்ரீ எம். சி. சக்ளா இங்கு கூறினூர். கார்டினல் தம்முடைய ஆப்த நண்பர் என்றூர்.

---

## பெர்லின் தீர்வு

லண்டன், நவ. 29

பெர்லின்மீது சர்வதேச கட்டுப்பாட்டை நிறுவுவதே பிரச்சினையைத் தீர்க்க வழி என்றும், இந்த விஷயத்துடன் கிழக்கு ஜெர்மனி அல்லது மேற்கு ஜெர்மனியைச் சேர்க்கக் கூடாது என்றும் பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கெய்ட்ஸ்கல் கூறினூர்.


# தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ்

## பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கரையில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:

சி. டப்ளியூ ஈ

கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்குலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

உதைபந்தாட்டம்

# யாழ்ப்பாணக் கோஷ்டிக்கு மகத்தான வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளுக்கான ஆட்டங்களில் நுவரேலியாக்கோஷ்டிக்கும் யாழ்ப்பாணக்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டி 6 கோல்களையும் நுவரேலியாக் கோஷ்டி 3 கோல்களையும பெற்றன. இப்போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டி மகத்தான வெற்றியை ஈட்டிக் கொண்டது.

யாழ்ப்பாணக்கோஷ்டி வீரர் ஆரம்பமுதல் இறுதி வரை மிகத் திறமையாக விளையாடினர். நுவரேலியாக்கோஷ்டி வீரர் இடையிடையே நல்ல முறையில் விளையாடி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு சண்முகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# காதகனுக வந்த காதலன்

மாரகம, திங்கள்

தனது காதலனல் ஏமாற்றப்பட்டதன் காரணமாக ஒவிட்டிகலையைச் சேர்ந்த ஈ. ஜி. அடிலேன் வித்தாரன என்னும் 17 வயதுப் பெண் 'அசெட்டிக் அஸிட்' உண்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் விட்டுச் சென்ற கடிதமொன்றில் தனது காதலன் செய்த குற்றத்துக்குத் தான் அவரை மன்னித்துக்கொள்வதாயும், அடுத்த பிறவியிலேனும் அவர் தமது கணவனுக இருப்பார் எனத் தான் நம்புவதாகவும் கூறியிருந்தார்.

தனது தந்தையாருக்கு விட்டுச் சென்ற கடிதமொன்றில், தந்தைக்குக் கீழ்ப்படியாமல் அவரைக் கலங்க வைத்த காரணத்தாலேயே தமது முடிவு காலம் கவலைக்குரிய தொன்ருயிற்று எனக் குறிப்பிட்டிருந்தார்.

அடிலேனின் காதலன் ஒவிட்டிகலையைச் சேர்ந்த பியசேன (21 வயது) என்பவராவர். விசாரணையின்போது அதிகாரி கூறியதாவது:

"தூய உள்ளத்துடன் அடிலேன் காட்டிய அன்புக்கு நீ நேர்மையுடையவனுக நடந்திருந்தால் அவர் அகாலமரணமடைந்திருக்க நேரிட்டிராது. பொறுப்புணர்ச்சியில்லாத முறையில் நடந்து கொள்ளும் அனைவருக்கும் இது ஒரு நல்ல பாடமாக இருக்கட்டும்".

## பிஜியில் பெண்களுக்கு வோட்டுரிமை 1963–ல் பொதுத் தேர்தல்

ஸாவா, நவ. 26

பிஜியில் மாதர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படும். அவர்கள் சட்டசபைக் கவுன்சிலுக்கு நிற்க அனுமதிக்கப்படுவர். பிஜி கவர்னர் ஸர் கென்னத் மாட்டாக்ஸ், கவுன்ஸிலில் இத் தகவலை வெளியிட்டார்.

எழுத்தறிவுள்ள வயது வந்தவர்களுக்கு வோட்டுரிமை அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும் விஸ்தரிக்கப்பட்ட வோட்டுரிமையைப் பற்றிய ஜாபிதா தயாராக குறைந்தபட்சம் ஒரு ஆண்டு ஆகுமென்றும் 1963–ம் ஆண்டு ஆரம்பத்தில் அநேகமாக பொது தேர்தல் நடத்தப்படுமென்றும் அவர் கூறினர்.

## வெளியேறிய இந்தியர்கள்

ஆகஸ்ட் முடிய 4508 பேர்

புதுடில்லி, நவ. 26

இலங்கையில் ஆகஸ்ட் மாத இறுதிவரையில் 4508 இந்தியர்கள் வெளியேறினர் என்றும், அவர்களில் 2823 பேர் தாமாகவே வெளியேறினர் என்றும், 1685 பேர் வெளியேற்றப்பட்டனர் என்றும் லோகசபையில் இன்று பிரதமர் நேரு, ஸ்ரீ டி. ஸி. சர்மாவுவிடம் கூறினர்.

## வாள் வீச்சால் ஒருவர் மாண்டார்

கொழும்பு, திங்கள்

கிரிலப்பனையில் ஒருவரை மற்றெருவர் வாளால் மிருகத்தனமாகத் தாக்கியபோது மக்கள் கூட்டம் திரண்டுநின்று பார்த்ததாம்.

தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கே மரணமானர்.

தாக்கியதாகக் கூறப்படுபவரை நேற்று பொலிஸார் கைதுசெய்தனர். காணி பற்றிய சச்சரவினுல்தான் சண்டை மூண்டது எனநம்பப்படுகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

திங்கள் 28-11-61

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற் சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழலும், கிளாரினட்டும்.

இரவு 7-00 எம். ஆர். கோவிந்தராஜா—பாட்டு, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 நாதஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 பி. எஸ். வீருசாமிப் பிள்ளை—நாகஸ்வரம், 9-15 சென்னை அஞ்சல், 9-30 'நம் பாடுவான்'—இசைநாடகம்.

## வீட்டுக்குள் புகுந்த அந்நியன்!

பம்பாய், நவ. 26

"போர்ச்சுக்கல் ஒரு வெளியானுக்குச் சமானம். உங்கள் வீட்டுக்குள் அந்நியன் அத்துமீறுப் புகுந்து விட்டால், என்ன செய்வீர்கள்? பொலிஸை அழைத்து வந்து, அவனை வெளியேற்றுவீர்கள்" என்று முன்னுள் நீதிபதி ஸ்ரீ எம். ஸி. சக்ளா, கோவாவை மீட்கப் பொலிஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகையில் கூறினர்.

## திருமுறைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலர் தினத்தை யொட்டி வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடாத்தப்பெற்ற திருமுறைப்போட்டியில் வெற்றி பெற்றேர் விபரம் பின்வருமாறு:–

மேற்பிரிவு I: 1. அ. கமலேஸ்வரி, 2. நா. சிவபாதசுந்தரம், 3. க. மகேஸ்வரி.

மேற்பிரிவு II: 1. மு. சத்தியேஸ்வரி, 2. வை. கமலாசனி, 3. சு. பத்மாவதி.

மத்தியபிரிவு: 1. செ. மாரிச்சாமி, 2. ப. சுப்பிரமணியம்.

கீழ்ப்பிரிவு I: 1. ச. இராசேஸவரி, 2. சி. சின்னராசா, 3. சொ. பொன்னம்மாள்.

கீழ்ப்பிரிவு II: 1. ம. இலட்சுமி, 2. செ.மகேஸ்வரி, 3. சோ. நடராசா.

ஆரம்பபிரிவு I: 1. க. பாப்பா, 2. மு. சத்தியேஸ்வரி, 3. தி. பூரணேஸ்வரன்.

ஆரமபபிரிவு II: 1. க. குகனேஸ்வரன், 2. த. செல்வராணி, 3. சீ. யசோதரா.

திருமதி எம். சண்முகம்பிள்ளை, பண்டிதர் இ. திருநாவுக்கரசு ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்,

நவம்பர் 29-ம் திகதி நிகழவிருக்கும் நாவலர் தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.

# இந்தியாவில் கட்டப்பட்ட "ஆவ்ரோ" விமானம்

## வெற்றிகரமாக பறக்கவிடப்பட்டது

புதுடில்லி, நவ 26

இந்தியாவில் கட்டப்பட்ட "ஆங்ரோ 748" பிரயாணிகள் விமானம் இன்று புதுடில்லியில் பாலம் விமான நிலையத்திலிருந்து பறக்கவிடப்பட்டது. இந்த விமானம் கான்பூரில் கட்டப்பட்டதாகும். வெள்ளையும், நீலநிறமும் கொண்ட இந்த விமானம் பறப்பதை பிரதமர் ஸ்ரீ நேருவும், பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ண மேனனும் பார்வையிட்டனர்.

பாரத இளைஞர்களின் தொழில் திறமைக்கு இந்த விமானம் ஒரு சின்னமாய் விளங்குவதாக பிரதமர் ஸ்ரீநேரு அப்போது கூறினர்.

காலஞ்சென்ற விமானத் தளபதி ஏர் மார்ஷல் முக்கர்ஜியின் பெயர் விமானத்துக்கு இடப்பட்டிருக்கிறது. "ஆங்ரோ" விமான உற்பத்தி விஷயத்தில் பெரிதும் முக்கிய ஸ்தானம் வகித்ததற்காக அவரது பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

## கைதிகளுக்கு 'கன்டீன்'

கொழும்பு, திங்கள்

சிறைக் கைதிகளுக்கு விரைவில் சிறைக்குள்ளேயே கன்டீன்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

சிற்றுண்டிகள், குளிர்பானம், வாசனைப் பொருள்கள் முதலியன இந்த கன்டீன்களில் கைதிகள் பெறுவதற்கு வசதி செய்யப்படும். வெற்றிலையும் சிகரட்டுகளும் மட்டும் இங்கு இவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது.

சிறையிலிருக்கும்போது கைதிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்தைக்கொண்டு இவர்கள் கடனுக்கு இந்தப் பொருள்களை வாங்கிக்கொள்ளலாம். உடனுக்குடன் இப் பொருள்களுக்கு சிறைக் கைதிகள் பணம் கொடுக்கக்கூடாது என சிறை அதிகாரிகள் கட்டுப்பாடு விதித்துள்ளார்கள். அவர்கள் கையில் பணம் புழங்கத்தொடங்கினல் இதனுல் ஏதேனும் கெடுதல் விளையத் தொடங்கிவிடலாம் என்ற காரணத்தினுலேயே இவ்வித கண்டிப்பு விதிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் காரணங்களால் இடமாற்றம்

### காரியாதிகாரியின் சங்கடம்

பதுளை, ஞாயிறு

அரசியல் காரணங்களுக்காக பதுளைபகுதியிலுள்ள ஒரு காரியாதிகாரி இருதடவைகள் இடமாற்றம் செய்யப்பட்டார் எனத் தெரிகிறது.

அரசாங்கக் கட்சிக்கு அவரால் ஆபத்து என பொதுத் தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிட்ட ஒருவர் ஆட்சேபித்ததன் காரணமாக அவர் முதலில் இடமாற்றம் செய்யப்பட்டாராம்.

மற்றெரு பார்லிமெண்ட் அங்கத்தவர் அவர்பற்றிப் புகார் கூறியதன்விளைவாக மீண்டும் வேறெரு இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டாராம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னரே தமக்கு குழந்தை ஒன்று பிறந்துள்ளதாக காரணம் காட்டி இரண்டாவது இடமாற்றத்தைத் தடைசெய்யுமாறு காரியாதிகாரி கோரியுள்ளதாகத் தெரிகிறது.

# யாழ்ப்பாணம் இரத்த வங்கியில் தட்டுப்பாடு

## இரத்ததானம் செய்யுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கியில் நோயாளர்களுக்குக் கொடுத்துதவி செய்ய போதியளவு இரத்தமில்லையெனத் தெரிகிறது. இரத்தமின்மையால் இந்த வங்கிக்கு இரத்த தானம் செய்து கொள்ளும்படி பகிரங்கமாகக் கேட்கப்பட்டுள்ளது.

இந்த ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களுக்கு பெருமளவு இரத்தம் தினமும் தேவைப்படுவதால் நோயாளர்களின் உயிரைக் காப்பாற்ற பொதுமக்களையும் பொது ஸ்தாபனங்களையும் முன்வந்து உதவியளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரிண்டன்ட் திரு. எம். கனகரத்தினம் இதுசம்பந்தமாக ஒரு பொது வேண்டுகோளை விடுத்துள்ளார். இந்த ஆஸ்பத்திரியில் நோயாளர்களுக்கு கொடுத்துதவ வேண்டிய இரத்த அளவை அதிகரிப்பதற்கு பொதுமக்களின் ஆதரவு உடனடியாகத் தேவைப்படுவதாகவும் இரத்த தானம் செய்ய வருபவர்களின் பட்டியலைத் தமக்குத் தந்துதவும்படியும் அவர் அதில் கேட்டுள்ளார்.

இவ்விரத்ததானம் கொடுப்பவர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 50 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒருமுறை இரத்த தானம் செய்வதற்கு 10 ரூபா வழங்கப்படுமாம். இரத்த தானம் செய்வோரிடமிருந்து இரத்தம் பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் இங்கு செய்யப்பட்டுள்ளன.


இது அசாதாரணமானது! இது இந்திய



கைத்தறி!

விசேஷமான, அலாதியான கிழக்கத்திய பாணிகளில் திரைச்சீலைகளுக்கு இந்திய கைத்தறித்துணிகளை உபயோகியுங்கள். படுக்கைவிரிப்புகள், டேபிள் லினன், பாய்கள் மற்றும் டர்க்கிஷ் துவாலைகள் உங்கள் வீட்டிற்குப் பிரத்தியேகமான சோபையை யளிக்கிறது.

ஹாண்ட்லூம்ஸ்

(கவர்ன்மென்ட் ஆப் இந்தியா)
தி ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பேப்ரிக்ஸ் மார்க்கெட்டிங் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி லிட்.,
ஜன்மபூமி சேம்பர்ஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய்—1, இந்தியா.

ALL INDIA HANDLOOM BOARD

கொழும்பு-7, ஸீ ஸ்டிரீட்.
ஜாப்னு-41, கிரவுண்ட்ப்ளோர், மெயின் ரோடு, (சிலோன்)
கண்டி-69, கொழும்புத் தெரு.
ஏடன்-போரா பஜார், க்ரேடர்.
சிங்கப்பூர்-23, ரேஸ்கோர்ஸ் லேன்.
கோலாலம்பூர்-67, ஆம்பாங் ரோடு.

# வல்வெட்டித் துறையில் துப்பாக்கிச்சூடு

## பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் சாட்சியம்

தெல்லிப்பளை, திங்கள் வல்வெட்டித்துறைக் கடற்கரையில் டி. சபாரத்தினம் என்பவர் துப்பாக்கியாற் சுட்டுக் கொல்லப்பட்டது சம்பந்தமாக நடைபெறும் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிபதி திரு ஏ. வயித்திலிங்கம் முன்னிலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது வல்வெட்டித்துறைப் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு அடைக்கலமுத்து சாட்சியமளித்தார்.

சபாரத்தினம் என்பவரை வல்வெட்டித்துறை முகாமைச் சேர்ந்த துப்பாக்கி வீரர் பெரேரா, கார்ப்ரல் குணரத்தினவின் கட்டளையின்மீது சுட்டதாக இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திரு அடைக்கலமுத்து சாட்சியமளிக்கையிற் கூறியதாவது:—

"தகவல்கிடைத்ததின்பேரில் சென்றபோது ஊரிக்காட்டுக் கடற்கரையில் ஒரு சடலம் இருக்கக் கண்டேன். இதுசம்பந்தமாக நான் விசாரணை செலுதபோது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எம். இரத்தினசாமி என்பவர் அங்கு காணப்படும் பிரேதம் தம்பையா சபாரத்தினத்துடையது என அடையாளங் காட்டினர். இறந்தவருடைய உடல் அழுக்கடைந்த வெள்ளைத் துணியினல் மூடப்பட்டிருந்தது. கைகளிரண்டும் வயிற்றுக்குக் கீழ் இருக்கக்கூடியதாக முகம் குப்புறக் கிடந்தது. வலது கண்ணுக்குச் சமீபமாக ஓர் இரத்தக்காயம்காணப்பட்டது சம்பவத்திற் குறிக்கப்படுகின்ற கட்டுமரமொன்றினையும் இரத்தினசபாபதி காட்டினர்.

### இரத்தக்கறை காணப்படவில்லை

அக்கட்டுமரத்தில் இரத்தக் கறையோ அன்றி துப்பாக்கிக் குண்டுபட்ட அடையாளங்களோ காணப்படவில்லை. வெற்றுக் குண்டுப்பெட்டி ஏதாவது கடற்கரையில் கிடக்குமா என்று சந்தேகித்துத் தேடியபோது ஒன்றும் தென்படவில்லை. அண்மையிலுள்ள தென்னைமரங்களிலோ அல்லது வேறு ஏதும் பொருள்களிலோ குண்டு பாய்ந்த அடையாளங்கள் காணப்படவில்லை. என். சபாரத்தினம், எம். இரத்தினசிங்கம், எஸ். தம்பையா. எஸ். மாணிக்கம், ஈ. மாணிக்கம் ஆகியோர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தேன். சாட்சிகளான என். சபாரத்தினம் எம். இரத்தினசிங்கம், எஸ். தம்பையா ஆகிய மூவரையும் வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அழைத்துச்சென்று காப்டன் வேதநாயகம் முன்னிலையில் அணிவகுப்பு ஒன்றினை நடத்தினேன். சபாரத்தினம் துப்பாக்கி வீரர் பெரராவையும், அன்றிரவு தங்களை அடித்ததாக சோமபால என்பவரையும் அடையாளங்காட்டினர். இரத்தினசிங்கம் என்பவர் துப்பாக்கி வீரர் பெரராவை அடையாளங் காட்ட மற்றைய சாட்சியான தம்பையா என்பவர் துப்பாக்கி வீரர் குமாரசிங்காவையும் அடையாளங் காட்டினர்.

பொலிஸ் உதவி அதிகாரி கோர்ட்டில் ஒரு துப்பாக்கு, ஒரு சப்பாத்து, அழுக்கடைந்த வெள்ளைத் துணி யொன்று, வெள்ளியினற் செய்யப்பட்ட ஒரு இடுப்புச் சங்கிலி ஆகிய பொருள்களைச் சமர்ப்பித்தார்

### டெலிபோன் தகவல் கிடைக்கவில்லை

கான்ஸ்டபிள் பியதாசா சாட்சியமளிக்கையில் தான் நவம்பர் மாதம் பத்தாம்திகதி மாலை 4-45 மணிமுதல் காலை 6-45 மணிவரை பொலிஸ் நிலையத்திற் கடமையாற்றியதாகவும், அச்சமயத்தில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்தெதுவிதமானடெலிபோன் அறிவிப்பும் தனக்குக் கிடைக்கவில்லையெனவும் கூறினர். அவர் மேலும் சாட்சியமளிக்கையில் இரவு எட்டரைமணியளவில் பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரியைவிசாரித்து இனந் தெரியாத இடத்திலிருந்து ஒரு டெலிபோன் அழைப்பு வந்ததாகவும் தான் நிலையப் பொறுப்பதிகாரி வெளியே ரோந்து சுற்றச் சென்றுவிட்டார் என்று அறிவித்ததாகவும் பின் அந்த இனந்தெரியாத இடத்திலிருந்து டெலிபோன் செய்தவர் சார்ஜன்ட் இராஜரத்தினத்தை விசாரித்ததாகவும் சார்ஜன்ட் ராஜரத்தினமும் அவரது விடுதிக்குச் சென்றுவிட்டதாகக் கூற 'சரி! சரி!!' என்று கூறிவிட்டு அந்த நபர் டெலிபோன் தொடர்பை முடித்துக்கொண்டதாகவுந் தெரிவித்தார்.

சார்ஜன்ட் வி. இராஜரத்தினம், கான்ட்டபிள் உபசேன ஆகியோரும் சாட்சியமளித்தனர்: கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களை அரசாங்க பரிசோதகருக்கும் விசாரணையின்பிரதியொன்றை வைத்திய பேராசிரியருக்கும் அவரவர்கள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டு மேல்விசாரணையை டிசம்பர் 4-ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

வல்வெட்டித்துறை பொலிஸ சப் இன்ஸ்பெக்டர் திரு. அடைக்கலமுத்துவின் உதவியுடன் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ சுப்பிரண்டண்ட் திரு. எஸ. மரியநாயகம் வழக்கை நடத்தினர். சந்தேக நபர்களுக்காக திரு. கே. இரத்தினசிங்கம் ஆஜரானர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

பிரேம்நாத், சித்ரா நடித்த

குவாடில்


### தொழிற்சாலைக்கு வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு போயிட்டி விளையாட்டுக் கழகத்தினருக்கும் மாவிட்டபுரம் அலுமினியம்தொழிற்சாலைவீரர்களுக்கும் இடையே நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் தொழிற்சாலை விளையாட்டு வீரர்கள் 3—0 கோல்களால் வெற்றுயீட்டினர்.

### ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சிலையை அமைப்பது மிகப் பொருத்தமாக இருக்குமென எனக்குப் படுகிறது. திருவருள் எப்படியோ?

### தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் நாகேஸ்வரராவ் நடித்த எங்கள் செல்வி

●

யாழ்ப்பாணம் மனோகரா பிரேம் நாத், சித்ரா நடித்த குவாடில்

●

சாவகச்சேரி தேவேந்திரா ஜெமினி கணேசன் நடித்த களத்தூர் கண்ணமா

# கண்டி குளத்தில் மற்றொருசடலம்

## கண்பார்வை இழந்ததால் தற்கொலைசெய்துகொண்டாராம்

கண்டி, திங்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவரும் பழைய போத்தல் சாக்கு வியாபாரம் செய்து வந்தவருமான பரமசிவம் தோமாஸ் நாடார் நேற்றுமுன்தினம் கண்டிநகரின் மத்தியிலுள்ள தெப்பக் குளத்தில் விழுந்து மாண்டார்.

தகவல்கிடைத்ததன் பேரில் நண்பகல் பொலிசார் ஸ்தலத்துக்கு வந்து சடலத்தை வெளியே எடுத்தனர்.

தென்னித்தியா திருநெல்வேலி மாவட்டத்தில் பரமசிவம் தோமாஸ் நாடாருக்கு மனைவி மக்களிருப்பதாகவும் இந்தியா சென்று மனைவி மக்களைப் பார்ப்பதற்காக அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தாரெனக் கூறப்படுகிறது.

நடுத்தர வயதான இவர் சில மாதங்களாக நோயுற்றிருந்தாரெனவும் ஆனல் திடீரென்று கண் பார்வையை இழந்து விட்டதால்வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்துகொண்டதாகவும் கூறப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன் இதே குளத்தில் இனம் தெரியாத ஒரு நபர் விழுந்து மாண்ட செய்தி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளி வந்தது நினைவிருக்கலாம்.

### பாப்பரசரின் பிறந்த தின விழா

உடுப்பிட்டி,ஞாயிறு "அகில உலகக் கத்தோலிக்க மக்களின் பொது விசுவாசத்துக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான பாப்பரசரின் 80வது பிறந்த தினத்தை இன்று உலக மக்கள் கொண்டாடுகின்றனர். இக் கொண்டாட்டம் உலக சமாதானத்துக்கும் ஆஸ்திகஞானநிஷ்டேற்றத்திற்கும் வழிவகுக்குமென்று கருதலாம்."

இவ்வாறு ஞாயிறு பிற்பகல் வதிரி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பாப்பரசர் தின விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியான "முத்திரையிட்ட பொருள்" என்னும் நாடகத்தின் பின் நன்றி தொரிவித்துப் பேசிய திரு. கே.மைக்கேற்பிள்ளை கூறினர். வண. ஜே. ஏ. கருணைகரர் அடிகளார் தலைமை தாங்கினர்.

### நெசவு நிலையத்தில் களவு

மாவிட்டபுரம், திங்கள் அம்சவேலி நெசவு நிலையத்தில் சென்ற சனிக்கிழமை இரவு யாரோ இனம் தெரியாத நபர்கள் கதவைஉடைத்து ரூபா 560 பெறுமதியான 80 சாரங்களைத் திருடிச் சென்றுவிட்டார்களெனக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்கிருர்கள்.

### கைப்பந்தாட்டப் போட்டி

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறை ரோயல் விளையாட்டுக் கழகத்தின் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அமைப்பின் கீழ் புன்னாலைக்கட்டுவன் விளையாட்டுக் கழகத்திற்கும் மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில்நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் புனலைக்கட்டுவன் விளையாட்டுக்கழகம் 2—0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

திரு. பி. சின்னத்துரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### ரூ. 1000 பிணையில் செல்ல அனுமதி

மாவிட்டபுரம், திங்கள் தொண்டமானற்றில் இனம் தெரியாத ஒரு நபரை மோட்டார் வானல் அடித்துக் கொலைசெய்ததாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்னையா குழந்தைவேல் என்பவர்மீது குற்றம்சாட்டி மல்லாகம் உதவி நீதிபதி திரு எஸ். ஆனையதம்பி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியை ரூ. 1000 பிணையில் செல்லும்படியும் 8ந் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

### தெபஸ்கமையில் அம்மை நோய்

கொழும்பு, திங்கள் அரனயகா பொலிஸ் பகுதியிலிருந்து ஒரு ஸ்திரீ அம்மை நோய் காரணமாக அங்கொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிருர்.

இந்த நோய் பீடிக்கப்பட்டிருப்பதாய்க் கருதப்படும் மற்றும் 37 பேர் தெபஸ்கம என்ற இடத்திலுள்ள பாடசாலைக் கட்டிடத்தில் தனியாக வைக்கப்பட்டிருக்கிருர்கள். சுகாதார அதிகாரிகள் பெருமளவில் அம்மைப்பால் குத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.


### வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம்

மேற்படி கல்லூரிக்கு நூல்நிலையப் பொறுப்பாளர் (Librarian) ஒருவரும் காவலாளர் (watcher) ஒருவரும் தேவை. நூல்நிலைய விஷயங்களில் பயிற்சியும் அனுபவமுமுள்ளவர்களின் விண்ணப்பங்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும். 10-12-6 க்கு முன் விண்ணப்பஞ் செய்யவும்—அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

### பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பள்ளி

1962–ம் ஆண்டு புதிதாக மாணவரைச் சேர்த்தல்

கீழ்க்காணும் வகுப்புக்களுக்கு மாணவரைச் சேர்க்கவிரும்புவோர் 29–11–61-ந் திகதிக்கு முன் விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். சேர்க்கக்கூடிய மாணவர் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வகுப்பு | சேர்க்குந் தொகை |
|---|---|
| பாலர் கீழ்ப்பிரிவு | 22 |
| நாலாம் வகுப்பு | 5 |
| ஆரும் வகுப்பு | 10 |
| பொ. த. ப. வகுப்பு (G. C. E. Proper) | 23 |

ஆரும் வகுப்புக்கும் அதற்கு மேற்பட்ட மற்றைய வகுப்புக்களுக்கும் தெரிவுப்பரீட்சை நடத்தப்படும் அதன் விபரங்கள் பின் அறிவிக்கப்படும்.

பண்டத்தரிப்பு,
மகளிர் உயர்நிலைப் பள்ளி.

இ. கி. மதியாபரணம்
அதிபர்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம்இல்லத்திலுள்ள அவாசளது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.